வெளியீடு எண் 149.

# ஸ்ரீ அம்பலவாணதேசிகர் பிள்ளைத்தமிழ்

(குறிப்புரையுடன்)

திருவாவடுதுறை ஆதீனம்

உ

சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து

இருபதாவது குருமகாசந்நிதானம்

# ஸ்ரீ அம்பலவாணதேசிகமூர்த்திகள்

பத்தாவது

# குருபூஜைவிழா மலர்.

சார்வரி — பங்குனி — திருவாதிரை

24—3—1961.

R.S. Sambasiva Sastri

வெளியீடு எண்: 149.

உ

சிவமயம்

# ஸ்ரீ அம்பலவாணதேசிகர் பிள்ளைத்தமிழ்

(குறிப்புரையுடன்)

இஃது

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து

இருபத்தொன்ருவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகள்**

கட்டளையிட்டருளியபடி

வெளியிடப்பெற்றது

5 MAY 1975

திருவாவடுதுறை ஆதீனம்

1961.

உரிமை பதிவு.

OFFICE OF THE DIRECTOR OF ... LOGY
4523
5 MAY 1975

694.811

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்,
— திருவாவடுதுறை. —



திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்தொன்ருவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# முகவுரை

---

ஆதியே தென்றுறைசை அம்பலவா ணனெனநீ
பேதமறக் கூடிநின்ற பெற்றிதனை - ஓதிலது
சாக்கிரா தீதம் தருமான்ம லாபமின்பம்
ஆக்குசிவ போகமென லாம்.

—பெரியபிள்ளை பாடல்.

தெய்வச் செந்தண்டமிழ் மொழிக்கு உரியனவாகச் சொல்லப்படும் பிரபந்த வகைகள் தொண்ணூற்றாறு என்பர் கற்றறிந்தோர். அவ்வகைப் பிரபந்தங்களுள் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தமும் ஒன்றாம். இது பிள்ளைப் பாட்டு என்றும் வழங்கப்படும். பிள்ளைத்தமிழ் என்பது பாட்டுடைத்தலைவனைப் பிள்ளைப்பருவத்தில் வைத்துப் பருவங்களுக்கு ஏற்ற ஏற்ற செயல்களைக் கூறிப் பாராட்டுவதாம். இதனைச் செவிலித்தாய் முதலியோர் கூறிப் பாராட்டுவதாகக் கவிஞர் புனைந்துரைப்பர். புலவர் பெருமக்கள் தாம் வழிபடுகடவுளையேனும், தம்முடைய ஞானாசாரியரையேனும், தம்மைப் பாதுகாத்து உலகத்துக்குப் பயன்படச்செய்த மகோபகாரிகளையேனும், அரசரையேனும் தம் நன்றியறிதலைப் புலப்படுத்தி இவ்வகைப்பிரபந்தம் இயற்றிப் பாராட்டுவர். சிவபெருமான் 'பிறவா யாக்கைப் பெரியோன்' ஆகலின் அக்கடவுளைக்குறித்து இவ்வகைப் பிரபந்தம் இயற்றுதல் என்றுமின்று. உமாதேவியார் மலையரையன் புதல்வி

யாகவும், பாண்டியன் மகளாராகவும் மற்றும் பல இடங்களில் மகளாகத் தோன்றியருளியமை காரணமாகவும் பிள்ளைத்தமிழ் பாடப்படும். விநாயகர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையும், திருமால் அநுமான் முதலிய மூர்த்திகளையும் இவ்வகைப் பிரபந்தம்செய்து பாராட்டியிருக்கின்றனர். சமய குரவர்களைப்பற்றியும் பிள்ளைத் தமிழ் உண்டு. இவ்வாதீனத்து எட்டாவது குருமகா சந்நிதானமாக விளங்கிய ஸ்ரீ மாசிலாமணி தேசிகர் 'திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ்' நூல் அருளிச் செய்திருக்கின்றனர். திராவிட மாபாடியகாரராகிய ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள் செங்கழுநீர்விநாயகர் பிள்ளைத்தமிழும், அமுதாம்பிகைபிள்ளைத்தமிழும் செய்தருளினர். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஸ்ரீ மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் என்னும் இரண்டுபிள்ளைத்தமிழ் செய்தருளினர். 'இளம்பருவவிளையாட்டைநோக்குழித் திருவுருவிடத்து ஆசைமிகுதி உண்டாம்' என்பதால் இவ்வகைப் பிரபந்தத்தைக்கூறிப்புகழ்தலுற்றேன் என்றருளினர் சிவஞான சுவாமிகள். 'இப்பிள்ளைக்கவி வித்தாரகவிக்கெல்லாம் முன்னியல்வது' எனச் சுவாமிகளே கூறியருளினர். இஃது ஆசிரியவிருத்தத்தால் பாடப்படுவது.

இப்பிரபந்தம் புறப்பொருள்வகையாகிய பாடாண் திணையில் "குழவி மருங்கினும் கிளவதாகும்" என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தால் கூறப்பட்ட காமப்பகுதி யின்பாற்பட்டு மக்கட்குழவிக்குரியதாக வழங்கப்படும். ஆயினும், ஒரோவழித் தெய்வத் தோற்றமாகிய மக்கட் குழவியின் பருவத்தை ஆரோபித்தலால் இது குழவி யோடு ஒற்றுமையுடைய தெய்வத்துக்கும் உரியதாக வழங்கப்படும். இந்தப் பிரபந்தம் ஆண்பாற் பிள்ளைத் தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரண்டுவகைப் படும். 'இந்தப் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம் மூன்றும்

மாதம் முதல் இருபத்தோராம் மாதம் வரை ஒற்றித்த மாதமாகிய பத்து மாதங்களினும் கேட்பிக்கப்படும். அன்றியும், ஐந்தாம் ஆண்டினும் ஏழாம் ஆண்டினும் கேட்பினும் இழுக்காகாது என்பர் வெண்பாப்பாட்டியல்நூலுடையார். "பிள்ளைப்பாட்டே தெள்ளிதிற்கிளப்பின், மூன்று முதலா மூவே ழளவும், ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே" எனவும், "ஒன்றுமுதலையாண்டு ஓதினும் வரையார்" எனவும் கூறுவர் பன்னிருபாட்டியலுடையார்.

இனி, பாட்டுடைத்தலைவராகிய குழந்தையைப் பாதுகாத்தல்வேண்டும் எனத் தெய்வங்களை வேண்டி அமைப்பது இந்நூற் காப்புப்பருவத்தின் இயல்பு. "திருமால் அரனே திசைமுகன் கரிமுகன், பொருவேல் முருகன் பரிதி வடுகன், எழுவகை மங்கையர் இந்திரர் சாத்தன், நிதியவன் நீலி பதினொரு மூவர், திருமகள் நாமகள் திகழ்மதி என்ப, மருவிய காப்பினுள் வருங் கடவுளரே" என்பது பன்னிருபாட்டியற்சூத்திரம். இம்முறையிற் சிறிது பிறழ்ந்தும் வேறுபட்டும் காப்பாக அமைத்த பெரியோரும் உண்டு.

இப்பிள்ளைத்தமிழின் ஆசிரியர் 'வழிபடு தேவுளும் கொலைதீர் தெய்வதங் காப்புரைக்க என வகுத்த ஆன்றோர், மொழியுணர்ந்தும் அவ்வழிச் சென்றிலர் முன்னோர்' ஆகலின், 'கொலைதீர் தெய்வம் காக்க என்னும் அவ்வழிச்சென்றனம் யாம்' என்று அமைவுகூறிப் பிறிதுவிதி வகுத்தனர். அகச்சந்தான குரவர் நால்வர், புறச்சந்தானகுரவர் நால்வர், அருணமச்சிவாயர், சித்தர்சிவப்பிரகாசர் என்னும் பத்துக்குரவரும் காக்க எனத் தனித்தனி கூறிப் பத்துச்செய்யுள் செய்தபின்பு பதினொராஞ் செய்யுளில் இப்பாட்டுடைத் தலைவருக்கு முன்பு ஆசாரியராக எழுந்தருளியுள்ள ஸ்ரீ பஞ்சாக்கர

தேசிக மூர்த்திகள் முதலாகப் பதினன்கு குரவர்களையும் கூறிக் 'காத்தருள்க என்று தொழுதெழுவாம்' என்ருர். ஸ்ரீ பஞ்சாக்கரதேசிக மூர்த்திகள் இத்திருவாவடுதுறை ஆதீனத்து முதற்குரவர். இந்நூற்பாட்டுடைத்தலைவர் இவ்வாதீனத்துப் பதினைந்தாங்குரவராகிய ஸ்ரீஅம்பல வாணதேசிகர் ஆவார்கள். (காலம் கி. பி. 1845-68)

இனி, ஆண்பாற் பிள்ளைத்தமிழாயின் "சாற்றரிய காப்புச்செங் கீரைதால் சப்பாணி, மாற்றரிய முத்தமே வாரானை - போற்றரிய, அம்புலியே ஆய்ந்த சிறு பறையே சிற்றிலே, பம்புசிறு தேரோடும் பத்து" எனப் பிள்ளைத்தமிழ்க்கவியினுறுப்புக்கள் அடைவே வருவன வாம். இந்த முறையில்வைத்தே ஆண்பாற்பிள்ளைத் தமிழாகிய இந்நூல் செய்யப்பட்டது: இதுவே மரபாம். பெண்பாற்பிள்ளைத்தமிழாயின் முற்கூறிய இறுதிமூன்று உறுப்புக்களையும் நீக்கி அம்மானை, நீராடல், ஊசல் ஆகிய மூன்று உறுப்புகளைச் சேர்த்துப் பத்துப்பருவ மாக்குவர்.

காப்புப் பருவத்தில்: இருண்மலம், மாயை, இருவினை, கழல் சூட்டுதல், நாதமகன்ற பெருநிலை, பசுத்துவம், உயிர் கரும அளவில் கருவிபற்றி ஒருழியெய்தல் முதலியனவும்; உருத்திராக்கம் (கண்மணி), திருநீறு, ஐந்தெழுத்து ஆகிய இவற்றிற்குக் காரணம் கற்பித்தல் முதலியனவும்; அடியாருக்கு இருக்குமிடம் வரையறுத்துத் தமக்கு இடம் குறியாமை; ஆரூர், திருவெண்ணெய் நல்லூர், திருத்துறையூர், கடந்தை, கொற்றவனூர் முதலிய ஊர்ப்பெயர்களும்; ஆலவனம், குருந்தவனம், அரசவனம் முதலிய வனங்களும்; பொதியத்திருமுனி, தொல்காப்பியர், திருவள்ளுவர்முதலிய சான்ருேர்களும் பிறவும் பேசப்பட்டன. கொன்றை, வெள்ளெருக்கு, கரும்பு, கமுகு, செந்நெல், பங்கயம், செங்கழுநீர் முதலி

யனவும் குறிக்கப்பட்டுள. சிங்கநோக்கு, முசுகுந்தன் தியாக சிந்தாமணியை நிலவுலகம் கொண்டுவந்தமை கூறப்பட்டுள.

2. செங்கீரைப்பருவத்தில்: பங்கயச் செங்கை தலைமேல் வைத்தல், ஆகமதீக்கை, பதஞ்சூட்டுதல், வழிவழியடிமை, அருட்டிருமேனிகொள்ளல், அரகர முழக்கம், பத்தியால் கண்ணீர் வார்தல், வழிவழியடிமை, குற்றேவல், உடல் பொருளாவி கொடுத்தல், நாவடுவொன்ற நாமம் நவிலல், அயன் அரியை எண்ணுமை, குரவர் செங்கழுநீர்மாலை தரித்தல் முதலிய சைவ சம்பிரதாயங்களும் கூறப்பட்டுள. இறைவன்: முழுக்குறி குணங் கடந்து பரநாத பரவிந்துவும் கழன்று முழுத்த பேரொளிப்பிழம்பினன், சர்வஞ்ஞத்துவன்; யானையுரித்தமை, குஞ்சிதபதம், ஊன்றியதாள்; மதிப்பிறை, கங்கை, கங்காளம், தலைமாலை, காகோதரம் (பாம்பு), கொன்றை, சடை முதலிய தரித்தல்; மான் பரசு ஏந்தியமை முதலிய செய்திகளும் சொல்லப்பட்டுள்ளன. மறை, ஆகமம், சங்கத்தமிழ் என்பனவும்; உபமன்னியர், திருமால், நான்முகமுனிவர், புவிக்கோதை, ஆகா ஊகூ, ஐம்பூதம், காளிதம், எகினம் என்பனவும் பிறவும் கூறப்பட்டுள்ளன.

3. தாலப்பருவத்தில்: பவனக்குடங்கர், குலிசப்படை, அமிர்தகடம், காவிக்கொடி, மீனக்கொடி, ஸ்ரீமுகம், சுதன்மை, சாருவாகநூல், தேவகுரு, இந்திரன், மதவேள், காஞ்சி, மாங்குயில், மருதக்கிள்ளை, தருக்கநூல், அகம்பரம், கேவல சகல சுத்த நிலைகள், செங்காடு, தன்னையே தருதல், தன்னை இழத்தல், அந்தணர் முதலிய நால்வராகவும் ஆசாரியனுதல், வருணமொழிதல், வையை அடைத்தநாள் மரநிழலில் வைகினமை முதலிய செய்திகள் கூறப்பட்டுள.

4. சப்பாணிப்பருவத்தில்: கைப்பரச்சுமை கழித்தல், விறகு மண் அங்கம் வெட்டியமை, சமய விசேட தீட்சைகள், அத்துவசோதனை, அபிடேகம், திருவடி சூடல், நீறுதவல், பாடியமுனிவர் (ஸ்ரீ சிவஞானயோகிகள்), கச்சியப்பமுனிவர், வன்றொண்டரைத் தமிழாற் பாடுக எனல், திருவாதவூரடிகள், திருக்கோவையார், மூர்த்திநாயனர், கண்ணப்பநாயனர், திருக்குறிப்புத் தொண்டர், திரிபுரம் நீறுபட்டமை, நால்வர் ஏத்துதல், சுத்தசைவம் சித்தாந்தசைவம், நீறு தொண்டர்க்கு அருளல், எருத்துரிபோர்த்த முரசம், குரவராவார் யாவரும் நின்நாமம் பயிறல், திருக்கைச்சாத்திடுதல், பசிப்பிணி உடற்பிணி மலப்பிணிகள், உண்கல சேடம், பண்டைப்பழக்கம் விடாமை, முதுகு தைவரல், சேர்ந்தறியாக்கை, தன்னைத்தான் பூசித்தல் முதலிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

5. முத்தப்பருவத்தில்: அகப்பந்தம், அகப்புறப் பந்தம், புறப்பந்தம், புறப்புறப் பந்தங்கள்; இன்பநிலையடையும் உபதேசம், இருவினையொப்பு மலபரிபாகம் சத்திபதிதல், மலபந்தம் நீங்கல், தசகாரியம், அகச்சம்பந்தம் அகப்புறச்சம்பந்தம் புறச்சம்பந்தம் புறப்புறச் சம்பந்தம் என்பன, இறைவனை இதயபங்கயத்திலே பூசித்தல், அட்டபுட்பம் சாத்தல், ஓமம்செய்தல், சிவோகம்பாவனை, அருத்தாபத்தி, சிவபெருமான் நஞ்சுண்டமை, புரம் நீறுபட நகைத்தமை, இறையனர் களவியல் அருளியமை, 'மதிமலிபுரிசை' 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் செய்யுள் செய்தருளியமை முதலிய வரலாறுகள், பொதுநாமம் சிறப்புநாமம் சூக்குமபஞ்சாக்கரம் என்பன, தாடகைக்காகத் திருமேனி வளைந்தமை, குங்குலியக்கலய நாயனர், முத்துத் தோன்றுமிடங்களிற் சில, பொன்னனையார் நகக்குறி பெற்றமைமுதலிய பல செய்திகள் விவரிக்கப்பட்டன.

6. வாராணைப்பருவத்தில்: சிவபெருமான் சூரிய மண்டிலத்து உறைதல். சந்திரமண்டிலத்து உறைதல், பிரதாபம், கீர்த்தி, நிலவு காட்டிலும் எரித்தல், மழை மருதநிலத்திலன்றி உவர் நிலத்திலும் பொழிதரல், அடிபெயர்க்குந்தொறும் இயமன் நடுங்குதல், சின்னங்கள் ஒலித்தல், விடைக்கு ஓரடி எனல், சுந்தரருக்காகத் தூது சென்றமை, பூமாலை பாமாலை சூட்டல், திருவடிகள் இரண்டும் ஞானம் கிரியை என்றும் திரோதானம் அநுக்கிரகம் என்றும் பேசப்படுதல், வருக வருக என அடுக்கி விளித்தல், அம்பலத்தில் ஆடுதல்,. நாவலூர் நம்பி திருமணத்துக்கு அழையாமல் எழுந்தருளியமை, தந்தைக்கொலை தாய்க்கொலை தாரக்கொலை தனயற்கொலை கடும்பு முழுதுங்கொலை செய்தார்பால் முந்திச் செல்லல் முதலிய செய்திகள் கூறப்பட்டன.

7. அம்புலிப்பருவத்தில்: சாம பேத தான தண்டங்கள் கூறப்பட்டன. அவை கற்றோருக்குப் பெருவிருந்தாம். பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தத்திலே அம்புலிப் பருவம் பாடுதல் எளிதன்று என்பர்.

8. சிற்றிற்பருவத்தில்: திருவேடப்பொலிவழகு, சித்தர் வகுத்த அறை, சிறுசோறுண்டல், கண்ணப்பர் வரலாறு, முன்னைப்பழக்கம், அழித்தற்குத் தக்கன இவை, வல்லார் எதுசெயினும் செய்யலாம், பொறுக்க விதியில்லை, அருட்டிருமேனி கொண்டமை எதற்காக எனல், எங்கள் சிற்றிலை எதுவாக எண்ணி நீர் அழிக்கின்றீர் எனல் முதலிய பலசெய்திகள் மிகச்சுவையாக உள்ளன.

9. சிறுபறைப்பருவத்தில்: உடுக்கையை அடிக்கும் குணில், ஐவகைநிலத்துப் பறைகளாதல், பாணினி வியாகரணம், துறைசை நவகோடிசித்தபுரம் எனல்,

தசகாரியம், சிறுபறைமுழக்கம் இன்னின்ன முழக்கம் போல்வதெனல், ஆசாரியன் தாமரையலர்த்தும் கதிரோனுதல், மந்திரவாதி முதலியோராக விளங்குதல், பரமசிவம் திருவடிகூடும்வழி மந்திரம் வலிமை பேரின்பம் இன்னவை எனக்கூறல், புகழ்பெறுதல் முதலியன கூறப்பட்டுள்ளன.

10. சிறுதேர்ப்பருவத்தில்: திரிபுரம் எரித்தமை, திருமாலாகிய விடையில் ஏறுதல், மண்தேர் ஏறுதல், திருமாளிகைத்தேவர் வடங்கழற்றிய தேரைச் செலுத்தியமை, துணைவந்த விநாயகர் அழகிய விநாயகர் உள்ளமை, தேரைச் செலுத்தாவிடில் சுப்பிரமணிய தேசிகரிடம் சொல்லுவோம் எனல், சிவபோக விளைவு, முதன்மை நின்னதேயாம் எனல், திரிபுரமெரித்தற்குச் செலுத்தியதேர் போன்றதன்று இது எனல், ஒருநாமமில்லாதாய் இருபத்தைந்து பேர் கொண்டனை எனல் என்பன கூறப்பட்டன. வாழ்த்துச் செய்யுளுடன் இப்பருவம் முற்றுப்பெற்றமை காண்க.

அருஞ்சொற்களிற்சில: சமழ்ப்பு, பொற்ற, காகோதரம் என்பன.

வடசொற்களும் சொற்றொடர்களும்: தயாநிதி, வரசரணம், பவனம், சுகுணம், ஞானவினோதன், பாற்கரன், சிற்பரன், அருணோதயம் என்பன.

அணிகள்: சிலேடை, தற்குறிப்பேற்றம், உருவகம் முதலியன.

இத்தகைய பெருமை வாய்ந்த இப்பிள்ளைத்தமிழ் நூலைத் தமது ஞானசிரியர் திருவடிக்கண் அணிபெறச் சாத்திமகிழ்ந்தார் ஆதீன மகாவித்துவான் திரிசிரபுரம்

ஸ்ரீ மீனுட்சிசுந்தரம்பிள்ளையவர்கள். இப்பிள்ளைத் தமிழுடன், கலம்பகநூலையும் இயற்றியணிந்தமை காரணமாகவே 'மகாவித்துவான்' எனப் பிள்ளையவர்கள் பெரிதும் பாராட்டப் பெற்றனர். ஆதீன சைவ சம்பிரதாயங்கள் நிறைந்து விளங்குவது இந்நூல் ஆகலின், இதனையும் 'குறிப்புரையொன்று எழுதி அச்சிடுக' என இப்போது இவ்வாதீனத்திலே திருமந்திர மாநாட்டையும் சித்தாந்த சைவ மாநாட்டையும் ஆண்டுகள் தோறும் கூட்டித் தமிழுலகம் சாத்திர தோத்திரநூல்களின் அருமையை எளிதில் அறிந்துய்யத் திருவுளங்கொண்டு விரிவுரைகள் வாயிலாகவும், நூல் உரைகளின் வாயிலாகவும் தமிழ்மக்கட்குப் பேரருள் புரிந்து 21-வது குருமகாசந்நிதானமாக வீற்றிருந்து குருக்ஷேத்திர சிவக்ஷேத்திர பரிபாலனங்களும், சித்தாந்த சைவசமய பரிபாலனம் செந்தமிழ்ப் பரிபாலனங்களும் சிறந்துவிளங்கச் செய்வித்து ஞான அருட்செங்கோலோச்சிவரும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக சுவாமிகள்** கட்டளையிட்டருளியபடி என் அறிவுக்கு எட்டியவரை குறிப்புரையொன்று நூதனமாக எழுதி ஆராய்ச்சி முகவுரையுடன் இருபதாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ அம்பலவாணதேசிகமூர்த்திகளின் குருபூசைத்தினமாகிய பங்குனித் திருவாதிரையன்று வெளியிடப்பெறுகிறது. குற்றமிருப்பின் பொறுத்தருள்க.

இங்ஙனம்,

சித்தாந்தசைவமணி—

**த. ச. மீனுட்சிசுந்தரம்பிள்ளை,**

ஆதீனவித்துவான்.

திருவாவடுதுறை,
22—3—1961

உ

சிவமயம்

# குருமரபு வாழ்த்து

---

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

—ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

## திருவாவடுதுறை ஆதீனத்து

# ஸ்ரீ அம்பலவாணதேசிகர் பிள்ளைத்தமிழ்

---

## பாயிரம்

### விநாயகர் துதி

சீர்கொண்ட தகுதியிற் றிரிகுணமு நிறுவிய
திறத்தடிக் கருமூடிகம்
திகழ்நடுச் செம்மணி யொளிப்பணி முடிச்சிதச்
சிறுபிறை வயக்கிடுதலால்
தார்கொண்ட மலர்செறி கிழக்குமேக் கொடுபகை
தவிர்ந்துதாய் நாப்பணட்டுத்
தாப்பிசைப் பொருள்கோளின் மேவவமர் கயமுகத்
தம்பிரான் ருள்பரசுவாம்
பார்கொண்ட தன்பொதுப் பெயரெழுத் தின்ருெகைப்
படிகொண்ட வாவடுதுறைப்
பதிகொண்டு துதிசிறப் புப்பெயரு மத்தொகைப்
படிகொண்டு பரவுயிர்கள்பாற்
கூர்கொண்ட வத்தொகை யதன்ருெழி லறக்கருணை
குலவியத் தொகையபாசங்
கூடா தளிக்குமம் பலவாண தேசிகன்
கொழிதமிழ்க் கவிதழையவே.

**ஆன்ருேரிலக்கண முகமாகக் காவற்கடவுளாவார்**
**இவரெனத் துணிந்து அவ்வழிச் சென்றமை கூறியது**

வழிபடுதே வுளுங்கொலைதீர் தெய்வதங்காப்
புரைக்கவென வகுத்த வான்ருேர்
மொழியுணர்ந்து மவ்வழிச்சென் றிலர்முன்னே
ரிரும்புகழ்க்கோ முத்தி யெங்கள்
பொழிகருணைச் சின்மயனம் பலவாண
தேசிகன்மேற் புகலப் புக்க
கழிமகிழ்யா மவ்வழிச்சென் றனஞ்சிறக்கு
மிப்பிள்ளைக் கவியுந் தானே.

# 1. காப்புப்பருவம்

## திருநந்திதேவர்

பூமேவு வேதா கமப்பொரு ளடங்கலும்
பொங்கொளிக் கைலைப்பிரான்
பொற்பத் தெருட்டத் தெருண்டுஞா னக்குரவு
பூண்டுமா லயனாதியோர்
தாமேவு மணிமுடித் தலைவணங் குந்தொறும்
தாங்குந் தொறுந்தழும்பு
தாட்புற மகங்கொண்டு பொலிநந்தி நாயகன்
றன்பெரும் புகழ்பரசுவாம்
பாமேவு பேருலகர் கருமவள விற்கருவி
பற்றியோ ருழியெய்தலே
பாங்கென வுணர்ந்திடத் தொழிலொன்று
பகருநான் முகமொழித்துத் [கோடலிற்
தேமேவு முகமொன்று தழுவியா வடுதுறை
செழிக்கவதில் வீற்றிருக்கும்
செல்வனைக் குரவர்தங் கோனையம் பலவாண
தேவனைக் காக்கவென்றே. 1

## சனற்குமாரமுனிவர்

### வேறு

எங்கள் பொதியத் திருமுனிவற்
கியைந்த பழங்காப் பியக்குடியோ
னென்னக் கருணைச் சயிலாதிக்
கியைந்து பிரமன் மான்முதலோர்

தங்க ளுணர்விற் கப்பாலாய்த்
தனித்தா ருணர்விற் குள்ளொளியாம்
சனற்கு மார முனிவர்பிரான்
சரணும் புயங்க டலைக்கணிவாம்
அங்கள் வழியு மாமலர்த்தா
ளகத்துப் போகட் டுறத்தேய்த்த
வதனை முடிக்கொண் டனனெனமண்
ணறையா வாறு திருமுடிமேல்
திங்க ளொழித்து வளர்செல்வத்
திருவா வடுதண் டுறைமருவித்
திகழுங் குருவம் பலவாண
தேவன் றனைக்காத் தருள்கவென்றே. 2

## சத்தியஞானதரிசனிகள்

## வேறு

பொய்யாத வேதச் சிரப்பொருளை யாரும்
புறங்காண வானநின் றும்
பொலிதரு தியாகமணி கொடுவந்த மன்னனும்
புந்திநாண் கொளவவித்தை
தையாத சருவசங் கப்பரித் தியாகமணி
தண்பெருங் கைலைநின் றும்
தவாதெங்கு நோக்கக் கொணர்ந்தசத் தியஞான
தரிசனிக டாள்பரசுவாம்
எய்யாத மாமலங் கழுநீ ரெனற்கியைய
வினியகழு நீருமாயை
யெழினிறா றித்தற் றெறிக்குங்கண் மணியெனற்
கியையக்கண் மணியுநீக்கம்

செய்யாத வினைநீறு செயுமெனற் கியையத்
திருந்தும்வெண் ணீறுமேனி
திகழவா வடுதுறையின் மருவுமம் பலவாண
தேவனைக் காக்கவென்றே. 3

பரஞ்சோதிமாமுனிவர்

வேறு

அந்த மரூஉஞ்சீர் முசுகுந்த
னன்பிற் றந்த மணியேற்ற
வான்ற நகரங் களுட்சிறந்த
வாரூ ரெனச்சத் தியஞானி
தந்த மணிகைக் கொண்டுயர்ந்த
தக்கோர் பல்லோ ருளுஞ்சிறந்த
தலைவ னுய பரஞ்சோதி
தாட்டா மரைக டலைக்கணிவாம்
இந்த வுலகிற் பரிபாக
மெய்தார் பேத மபேதமென
விசைத்துப் பிணங்கா தெய்துவித்தே
யியல்பு விளக்க வுருக்கொண்டு
வந்த கருணைப் பெருஞ்செல்வன்
வான்றோய் பொழில்சூழ் திருத்துறைசை
மருவுங் குருவம் பலவாண
வள்ள றனைக்காத் தருள்கவென்றே. 4

மெய்கண்டசிவாசாரியர்

போந்து புறத்துப் படரிருளைப்
போக்குங் கதிரும் பன்னிரண்டே
பொங்கி யகத்துப் படரிருளைப்
போக்குங் கதிரும் பன்னிரண்டே

ஏந்து புடவி யிடத்தெனப்பன்
னிருகூத் திரஞ்செவ் வாய்மலர்ந்த
விணையில் வெண்ணெய் மெய்கண்டா
னிணைத்தா மரைத்தா ளிறைஞ்சுவாம்

வாய்ந்த வடபா லாலவனம்
வயங்கு தென்பாற் குருந்தவனம்
மருவு வாரு மருள்பெறுவான்
மன்னு நடுப்பா லரசவனத்
தாய்ந்த சிங்க நோக்கமென
வமர்ந்து நோக்குங் குருசிங்கம்
அருள்கூர் திருவம் பலவாண
வடிக டமைக்காத் தருள்கவென்றே. 5

## அருணந்திசிவாசாரியர்

போத நவின்ற பெருங்குரவன்
பொற்பார் சித்தி கேட்டுமகிழ்
பூத்துச் சிறப்புப் பாயிரமாப்
பொலிய முதலா சிரியன்பேர்

சாத நினக்குத் தருமென்று
சார்த்தச் சிறந்த திருத்துறையூர்த்
தலைமை யாள னருணந்தி
தாட்டா மரைக டலைக்கணிவாம்

நாத மகன்ற பெருநிலையை
நாடு முயிர்கட் கருள்புரிந்து
நாளும் பசுத்து வந்தீர்ப்போம்
நாமென் றதனுக் கறிகுறியாச்

சீத மலியும் புனற்றடஞ்சூழ்
திருவா வடுதண் டுறைமருவும்
செல்வ னருளம் பலவாண
தேவன் றனைக்காத் தருள்கவென்றே. 6

### மறைஞானசம்பந்தசிவாசாரியர்

### வேறு

அரியபுக ழாசிரியர் பலருமுடை யவரே
யாயினும்பங் கயம்போலத் தலைமைதரு வழக்காற்
பிரியமிகு மறைஞான சம்பந்த னெனும்பேர்
பெற்றுவிளங் கியகடந்தைப் பெரியோனைத் தொழுவாம்
கரியமலப் பிணிகழலக் கழல்சூட்டி யடியேங்
கன்மனத்தும் வன்மனத்தர் கருதாத கனகப்
பரியமதிற் றுறைசையகத் துங்கழலா தமரம்
பலவாண தேசிகனைக் காத்தருள்க வென்றே. 7

### உமாபதிசிவாசாரியர்

விரும்புசிவப் பிரகாசந் தவப்பிரகா சமிலா
வெய்யயாங் களுமடையச் சிவப்பிரகா சத்தோ
டரும்புபல நூலருளிச் செய்தவருங் குரவ
னண்ணலுமா பதிசிவனை யஞ்சலித்துத் துதிப்பாம்
பெரும்புலவர் பெரியோனென் றறிந்தேத்தப் பட்ட
பின்னருமம் பலவாணப் பெயர்புனைந்த கள்வன்
கரும்புகமு கெனவோங்கும் வயன்மலிதண் டுறைசைக்
கண்ணமரண் ணலைநாளுங் காத்தருள்க வென்றே. 8

### அருணமச்சிவாயர்

இருண்மலமு மாயையுமற் றிருவினையுங் கழிந்தின்
பெய்திடவெய் திடுமுயிர்கட் கினிதருளுந் திறத்தா

லருணமச்சி வாயனெனக் காரணப்பேர் புனைந்த
வண்ணலடித் தாமரைக ணண்ணல்குறித் திடுவாம்
பொருண்மலிசெங் கொன்றையொடு வெள்ளெருக்கு
[மொப்பப்
பொறுத்தபழங் காரணத்தானலவர் துதியொடுமித்
தெருண்மலியா வெந்துதியுங் கொண்டுதுறை சையில்
[வாழ்
தேசிகனம் பலவாணன் றனைக்காக்க வென்றே. 9

### சித்தர்சிவப்பிரகாசர்

தம்மடியர்க் கிருக்குமிடம் வரையறுத்துத் தெரித்துத்
தமக்கிருக்கு மிடங்குறியா தெவ்விடத்தும் பயிலும்
செம்மனத்தா ராயினுமெஞ் சித்தத்து மமர்ந்த
சித்தர்சிவப் பிரகாசர் சேவடிக டொழுவாம்
செம்மலரும் வெண்மலரு மெடுத்தடியர் தூற்றச்
சேவடிமேல் வீழ்தலிரு தேசிகரும் பலகால்
அம்மவணங் குதல்பொருவக் கோகழிவீற் றிருக்கும்
அம்பலவா ணனைநாள்க டொறுங்காக்க வென்றே.
10

### நமச்சிவாயமூர்த்திகள் முதலிய பதினல்வர்

### வேறு

புரவு மிகுவள் ளுவர்குறளுட்
புணர்பத் தினுமுள் பொருளிதெனப்
புகலு மொன்றிற் குருமூர்த்தம்
புகல்பத் திலுமுள் பொருளிதென்று
பரவு முலக முணர்ந்தேத்தப்
படிவங் கொண்டு வெளிவந்த
பண்பார் நமச்சி வாயர்முதற்
பதினல் வரையுந் தொழுதெழுவாம்

குரவு புனையா வருமிருகை
கூப்பப் பொலியு மரசெனநூல்
குறியா வுணர்ச்சி யாளருமுட்
கொண்டு தெளிதற் கறிகுறியா
விரவு மரச வனத்தமர்ந்து
விளங்கா நின்ற சின்மயனை
மிக்க புகழும் பலவாண
மேலோன் றனைக்காத் தருள்கவென்றே. 11

## 2. செங்கீரைப்பருவம்

நீர்பூத்த தாமரை சமழ்ப்புறப் பொலியும்விழி
நெடியமா லுபமன்னியர்
நின்னு கமத்தின்வழி புரிதீக்கை பெற்றநாள்
நீக்கின னெனப்புழுங்கும்
தார்பூத்த கூந்தற் புவிக்கோதை யதுபெறத்
தண்ணீரி லசைவிலாது
தானின் றருந்தவஞ் செய்வள்களை யாவுடைத்
தன்மையளு மாதலாலப்
பார்பூத்த நாற்றமுட் குறியாம லுட்கொண்ட
பருவமொன் றேகுறித்துப்
பங்கயச் செங்கைதலை மேல்வைத் தெடுத்தொரு
பதஞ்சூட்டி முகமலர்ந்து
சீர்பூத்த பேரருட் டிருமேனி கொண்டவன்
செங்கீரை யாடியருளே
சிற்பரன் றுறைசையம் பலவாண தேசிகன்
செங்கீரை யாடியருளே. 1

முந்தைமறை யாவையு முணர்ந்தநான் முகமுனிவன்
முன்னின் று தாளமொத்த
முருகுவிரி பைந்துழாய் மாலைதுயல் வருபுய
முகுந்தனெடு முழவதிர்க்க
வந்தைதவி ராகாவு மூகூவு மேழிசை
யமைத்தமிர்த தாரைவாக்க
வரகர வெனக்கணங் களிகொண்டு துளி
வங்கணர்க ளாகியேத்த [கொண்ட

நிந்தைதவி ரிருமுனிவர் புடைநிற்க வேண்டுமென
நினையாதி நினைவையாயின்
நின்பழைய வுருவமொடு நேர்நிற்றி யாலென
நிகழ்த்துதற் கஞ்சமாட்டேம்
சிந்தைகளி கூரவருள் வடிவாகி நின்றவன்
செங்கீரை யாடியருளே
சிற்பரன் றுறைசையம் பலவாண தேசிகன்
செங்கீரை யாடியருளே. 2

மும்மையுல கும்புகழும் வேதா கமம்பகர்
முழுக்குறி குணங்கடந்து
மொழிகின்ற பரநாத பரவிந்து வுங்கழன்
முழுத்தபே ரொளியாகியே
நம்மையொரு மழவிளங் குழவியென வுட்கொடு
நயந்துபா ராட்டுமறிவு
நன்று யிருந்தஃ தெனக்கருதி யையநீ
நகையற்க நகைசெய்வையே
எம்மையறி யாமையுடை யாரிவர்க ளென்றுநீ
யினறுதான் கண்டனைகொலாம்
என்றுநினை யாங்களு நகைத்திடுவ மன்பினர்த
மெய்ப்பில்வைப் பாயமுதல்வா
செம்மைநெறி யாரையு நிறுத்தவெழு கருணையோய்
செங்கீரை யாடியருளே
சிற்பரன் றுறைசையம் பலவாண தேசிகன்
செங்கீரை யாடியருளே. 3

ஐயசற் றிதுதிரு வுளஞ்செய்து கேட்கவய
னரியையெண் ணுதயாங்கள்
அமைதர நினக்குவழி வழியடிமை யுண்மையென்
றுவணம் வரைந்துதவுவோம்

பொய்யமை தராதுபக லிரவுநின் குற்றேவல்
போற்றுவ மதாஅன் றுதுதியும்
புதிதுபுதி தாகப் புரிந்திடுவ மிவைகளும்
போதா வெனத்தெரிந்து
வெய்யவுட லும்பொருளு மாவியு மடங்கா
விருப்பிற் கொடுத்துவிடுவேம்
மேலுமினி யென்செய்து மிதனின்மேற் செய்ப
விண்ணுமிலை யிதுமொழிதலும் [வர்கள
செய்யதன் றினிநீ செயற்பால தென்கொலோ
செங்கீரை யாடியருளே
சிற்பரன் றுறைசையம் பலவாண தேசிகன்
செங்கீரை யாடியருளே. 4

காமரு மதிப்பிறையு மறிதிரைக் கங்கையும்
கங்காள மும்பிரமன்மால்
கழிதலைத் தொடையலுங் காகோ தரங்களும்
காடுபடு பொற்கொன்றையும்
ஆமரு விருஞ்சடையு மாகிய பெருஞ்சுமை
யகன்றுயிர்ப் புற்றதிலனல்
ஐயநின் றிருமுடி யசைத்திட வருத்தமின்
றடன்மிருக மோடுபரசும்
தாமரு விலாமையாற் செங்கைநில மூன்றத்
தடுக்குமிடை யூறுமின்று
தாங்குகுஞ் சிதமின்மை யாலடி பதித்திடத்
தடையெவன் புடைவிராவித்
தேமரு வுறுங்காவி சூடிய புயாசலன்
செங்கீரை யாடியருளே
சிற்பரன் றுறைசையம் பலவாண தேசிகன்
செங்கீரை யாடியருளே. 5

### வேறு

பிறைபடு பற்குற ளுடனெளி யப்பிணர்
பெறுவெரிந் மிசையொருதாள்
பெயர்வற வூன்றுபு மற்றொரு பொற்றுள்
பேண வெடுத்தொளியே
நிறைதரு குஞ்சித மாக்குத லன்று
நெடுங்கக னந்தடவ
நிலவொரு பாத மெடுத்து கிமிர்ந்து
நிகழ்த்தலு மன்றுபெருங்
கறையடி யானை யுரித்துரி மேனி
கலப்புற மூடியொரு
காலை முடக்கி மடக்குத லன்று
கரும்பிர சம்பொழிரோ
றறைதரு மாவடு தண்டுறை நாத
ளுடுக செங்கீரை
அறிவுரு வாகிய வம்பல வாண
ளுடுக செங்கீரை. 6

துங்கப் பெருமறை யந்தண ராதியர்
சூழ்ந்தனர் கொண்டாடத்
தோலா வாகம முற்றுஞ் சென்னி
துளக்கி யெழுந்தாடச்
சங்கத் தமிழெனு மொருதே வுவகை
தழைத்துல கத்தாடத்
தளர்வுறு பரசம யப்பே யஞ்சுபு
தலைசுற் றினவாடச்
சிங்கக் குருளை யெதிர்ப்படும் யானைத்
திரளென வெண்கமலத்
திரள்குடி வாங்கி நினைக்கரு தாருட்
சென்று பதிந்தாட

வங்கத் துறைகெழு மாவடு துறையிறை
யாடுக செங்கீரை
அறிவுரு வாகிய வம்பல வாண
ஞடுக செங்கீரை. 7

ஒள்ளிய கந்தர மேவிய கருமை
யொழிந்தனை யப்பொழுதே
யுற்ற மலத்தின் கருமையும் யாங்க
ளொழிந்தனம் வெங்கொலைசால்
வெள்ளிய கோட்டுக் கரியுரி போர்த்தல்
விலங்கினை யப்பொழுதே
மேவிய மாயை போர்த்தலும் யாங்கள்
விலங்கின மேவுபணப்
புள்ளிய வாளர வத்தொகை பூணுதல்
போக்கினை யப்பொழுதே
பொங்கு வினைத்தொகை பூணுதல் யாமும்
போக்கின மலர்நடுவில்
அள்ளிய வாவிய கோகழி நாயக
ஞடுக செங்கீரை
அறிவுரு வாகிய வம்பல வாண
ஞடுக செங்கீரை. 8

பரசம யத்தவர் வாயு ணுழைந்து
பயின்றிடு பிருதிவியே
பற்றிய தொண்டின் வழிப்படு சைவப்
பைங்கூழ் பாய்புனலே
விரச வழுத்துநர் வெவ்வினை யடவி
வெதுப்பி யெழுங்கனலே
மெய்யுற நோக்கினர் பாவ மெனுந்துய்
விலக்க வுலாம்வளியே

வரசர ணத்தின் மனத்தை நிறுத்தி
வயக்கி முயக்குறுவான்
மாதவ மாற்றுந ருள்ளந் தோறும்
வளைந்து விராம்வெளியே
அரச வனத்தம ருங்குரு நாத
ஞடுக செங்கீரை
அறிவுரு வாகிய வம்பல வாண
ஞடுக செங்கீரை. 9

### வேறு

நாவடுவொன்றநி ஞமநவின்றிடு மொண்சில
நாடியவெங்களை நீயயலென்றுநி ணைந்தாய்கொல்
லோவடுவொன்றிய காளிதமென்பது விண்டேநின்
ஞேடுறலென்றுத யாநிதியென்றெவ ரும்பேச
மாவடுவென்றகண் மாதரொடுந்திகழ் பைந்தூவி
வாலெகினம்பல வாவிதொறுங்களி கொண்டாடும்
ஆவடுதண்டுறை மேவுமிளங்கதிர் செங்கீரை
ஆரருளம்பல வாணசவுந்தர செங்கீரை. 10

# 3. தாலப்பருவம்

முருந்து முறுவ லிளமாதர்
முன்னி யாடும் பெருந்தடத்து
மூழ்கிச் சிறகர் வெள்ளெகின
முற்றும் பாசி போர்த்தெழுந்து
பொருந்துங் கரையி லிருந்துதறிப்
பொலியும் பழைய நிறமடைந்து
பொலித லொருங்கு வெண்முகில்கள்
புணரி தோய்ந்து கறுத்தெழுந்து
வருந்து திறத்தின் வரையிவர்ந்து
மன்னும் பயந்தீர் தரவுதறி
வயங்கும் பழைய நிறமுறுதன்
மானுங் கழனி யுடுத்துவளம்
திருந்து திருவா வடுதுறைவாழ்
செல்வா தாலோ தாலேலோ
சித்திற் பொலியம் பலவாண
தேவா தாலோ தாலேலோ. 1

வான்றோ யடுக்கு மாளிகைமேல்
வைகு மாமை மடநல்லார்
வயங்கு பவனக் குடங்கரைவெள்
வாய்வாள் விழியி னுறநோக்கி
ஊன்றோய் குலிசப் படைவேந்த
னுடைய வமிர்த கடமென்றும்
ஒருநந் திருமா ளிகைத்தேவ
ருயர்த்த வமிர்த கடமென்றும்

ஆன்றோய் நின்னை யடையாதாம்
அபேதம் பேத மெனப்பிணங்கும்
அதுபோற் பிணங்கிப் பெயரநினை
யடைந்தார் போலத் தெளியும்வளத்
தேன்றோய் திருவா வடுதுறைவாழ்
செல்வா தாலோ தாலேலோ
சித்திற் பொலியம் பலவாண
தேவா தாலோ தாலேலோ. 2

ஓங்கு நினது திருமுன்ன
ருயர்த்த காவிக் கொடிமதனன்
உயர்த்த மீனந் தனக்கினமா
யுள்ள வனைத்துங் கீழ்ப்படுத்தி
வீங்கு மமரர் நாட்டினுக்கும்
விடுத்த நினது திருமுகம்போல்
வேந்தன் சுதன்மை கிழித்தெழிந்து
மேவ விரைவி னுண்டளப்பான்
ஆங்கு நோக்கி நடுநடுங்கி
யந்தோ சாரு வாகநூல்
அறைந்தா மரசன் வினவிலெவ
னறைவா மெனவுட் டுயரமகிழ்
தேங்குந் திருவா வடுதுறைவாழ்
செல்வா தாலோ தாலேலோ
சித்திற் பொலியம் பலவாண
தேவா தாலோ தாலேலோ. 3

கூடுருங் கருணை நின்காவிக்
கொடிமீப் போய்க்கறற் பகக்கிளையிற்
கூட நறுஞ்செந் தளிர்கொய்வான்
குறித்த தேவ குருவாங்கண்

யாருங் குறுக வடைந்த வன்மற்
றிதனை மயங்கித் தீண்டுதலும்
இன்ன தசைய வெழுங்காற்று
லிணர்த்துப் பாங்கர் நின்றசைந்து
தேருங் கவுளி னுறப்புடைத்துச்
சிந்தை வெருவி மெய்ந்நடுங்கித்
தெளியா வனையா னேட்டெடுப்பச்
செய்யா நின்ற திருவரசு
சேருந் திருவா வடுதுறைவாழ்
செல்வா தாலோ தாலேலோ
சித்திற் பொலியம் பலவாண
தேவா தாலோ தாலேலோ. 4

அழிக்கு நினது பழம்பகையு
ளாய்ந்து வடிவம் பலதாங்கி
அடுத்த கருவி யொடுமதவே
ளமைந்து நிற்கு நிலையென்னக்
கொழிக்குங் கரிய காஞ்சிகளுங்
கொடியால் வளைந்த பலகரும்பும்
கூவா நின்ற மாங்குயிலும்
குலவு மருதக் கிள்ளைகளும்
விழிக்குங் கமல முதன்மலரும்
விரிந்த கமுகம் பாளைகளும்
மீன மெழுந்து பாய்தலுமாய்
விளங்கா நின்ற கருங்கழனி
செழிக்குந் திருவா வடுதுறைவாழ்
செல்வா தாலோ தாலேலோ
சித்திற் பொலியம் பலவாண
தேவா தாலோ தாலேலோ. 5

### வேறு

உரைதரு தன்மையில் செல்வ மயக்க
முருது பிழைத்தவரும்
ஒள்ளிய வேல்விழி மங்கையர் கொங்கை
யுவத்த லொழிந்தவரும்
கரையரு கல்வி முயன்று பயின்ற
களிப்பி னகன்றவரும்
காமரு சைவ மலாத மதங்கள்
கலத்தல் கழிந்தவரும்
இரைதரு கின்ற தருக்க மகம்பர
மென்ப திரித்தவரும்
என்று நமக்கரு ளுங்கொ லெனப்புடை
யெண்ணிலர் சூழ்ந்தேத்தத்
தரையில் விளங்கும் பேரரு ளாளா
தாலோ தாலேலோ
தண்டுறை சைப்பதி யம்பல வாணு
தாலோ தாலேலோ. 6

முளைமதி நாளும் வளர்ந்திருள் சீத்தலின்
முன்னு பெருங்கருணை
மொய்த்தப லுயிர்க ளிடத்தும் வளர்ந்து
முருக்க மலக்களை
விளைகதிர் ஞாயி றெனச்சுடர் தோற்றி
வெளிப்படு மேன்மையனே
மேவிய கேவல நிலைமலர் பைந்தரு
விட்டக லாத்தழலும்
வளைதரு சகல நிலைக்கட் கற்பொலி
வன்றழ லுஞ்சுத்தம்
வாய்ந்த நிலைக்க ணயத்தழ லும்பொர
மன்னி வயங்கிடுவோய்

தளையவிழ் செங்குவ ளைத்தொடை யாளா
தாலோ தாலேலோ
தண்டுறை சைப்பதி யம்பல வாண
தாலோ தாலேலோ. 7

நின்னை யிளங்குழ விப்பரு வத்து
நிகழ்ச்சி யுறத்துதிசெய்
நீர்மையி னெங்களை யையுற லைய
நிலாவிய செங்காட்டின்
முன்னை யடைந்தது போலடை வாயெனின்
முன்னிய தெய்தாய்நீ
முற்றிய வெங்களை யேநனி நல்குது
மொழிவது மொன்றுளதால்
பின்னை யெனுதுரை செய்குது நின்னைப்
பெட்பொடு பாராட்டும்
பெற்றி யுணர்ந்தனை மற்றொரு ரிடத்தப்
பெற்றிகொ டடையற்க
தன்னை யிழப்பின் விரைந்தருள் குரவா
தாலோ தாலேலோ
தண்டுறை சைப்பதி யம்பல வாண
தாலோ தாலேலோ. 8

புண்ணிய வேத முடிப்பொரு டெளியப்
புகறலி னிகரிலதாய்ப்
பொங்கொளி வெண்குடை நீழலின் வைகப்
புவன நடாத்துதலின்
எண்ணிய வெங்களை வாங்கி யுனைத்தந்
திடுதலி னெங்களுயிர்
என்னு நிலத்துணர் வென்புனல் பாய்த்தி
யிருதெழு பேரின்பம்

நண்ணிய போகம் விளைத்தலி னைத்தனை
நால்வரு மென்பதலால்
நகுவரு ஞாதி யொழிந்தொளி ருண்மை
நலந்தெளி யேமெளியேம்
தண்ணிய மேலவர் கண்ணிய முதல்வா
தாலோ தாலேலோ
தண்டுறை சைப்பதி யம்பல வாணா
தாலோ தாலேலோ. 9

நகைதிக ழாகம வன்றொடர் பூட்டி
நலங்கிளர் மாமறையே
நாடிய தொட்டி லெனச்செறி வித்து
நவின்றப லுபநிடத
வகையணை மீமிசை வைகுறும் யாமிம்
மடவர்செய் தொட்டிலினும்
வைகுவ தோவென் றெண்ணலை
எண்ணிடின் வையையடைத்திடுநாண்
முகைசெறி யோர்தரு நிழலினும் வைகினை
முதுமறை யாதிகளும்
முற்றிய வோவவ னென்றிடின் யாது
மொழிந்திடு வாயளவாத்
தகைபடு சுகுணமெய்ஞ் ஞான விநோதா
தாலோ தாலேலோ
தண்டுறை சைப்பதி யம்பல வாணா
தாலோ தாலேலோ. 10

# 4. சப்பாணிப்பருவம்

உரைசெயெப் புவனத்தி னுங்கைப் பரச்சுமை
யொழித்தவர்க டக்கவேலை
ஒன்றினி தியற்றுதற் கெண்ணு ரதன்றியு
முரைக்குமுன் செயவும்வல்லார்
கரைசெயிது நிற்கமழு மானென்டுஞ் சூலம்
கபாலம்வெந் தழறமருகம்
காணுமிவை முற்சுமை கழித்தலி னுடம்படுதல்
கடன்மையே கன்றுமென்னில்
விரைசெய்மலர் செற்றுபொழில் சுற்றுமது ரையில்
வெட்டிமண் வெட்டியங்கம் [விறகு
வெட்டிப் பயின்றவங் கைத்தலங் கொடுநவில
வேண்டுமென் போமென்செய்வாய்
தரைசெய்பய னுய்வந்த மெய்ஞ்ஞான பாற்கரன்
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்த் துறைசையம் பலவாண தேசிகன்
சப்பாணி கொட்டியருளே. 1

புண்ணிய மலிந்தநின் றிருவார்த்தை யென்னப்
பொலிந்தபே ராகமத்திற்
போற்றுபெரு நடவையிற் சமயமும் விசேடமும்
பொற்பப் புரிந்துபின்னர்
அண்ணிய சிரத்தின்மேற் றங்கிமனு முதலாய
வத்தவடி வங்களாறும்
அமைதரச் சோதனை புரிந்தபின் விரும்பிநவி
லபிடேக மாதிகொண்டு

கண்ணிய நறுந்தா மரைத்திரு வடித்தலம்
கருதுமச் சென்னியேறக்
கண்டபின் யாவருங் காணநீ றுதவியெம்
கைம்மீது மேறி மிளிரும்
தண்ணிய மலர்க்கைகொடு ஞானவடி வாயினேன்
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்த் துறைசையம் பலவாணதேசிகன்
சப்பாணி கொட்டியருளே. 2

நின்னையொப் பில்லாத சின்மய னெனக்கலை
நிரம்புபா டியமுனிவனும்
நெடியசிவ ஞானமுனி யாலுணர்ந் தேந்துதி
நிகழ்த்தலிவ் வாறதென்றே
அன்னையொப் பாங்கச்சி யப்பமுனி யானன்
றறிந்தன மினித்துதித்தற்
கஞ்சுரே மெங்கள்செய லிற்றுக வெங்களின்
அகப்படா தகல்வையலைநீ
பின்னைமற் றென்றெண்ணி யகலநினை வாயெனிற்
பெரிதுமகிழ் செய்தல்பாட்டே
பேணுகென வன்றொண்டர் பாற்பேசி னனெவன்
பேசெனி னெவன்பேசுவாய்
தன்னையொப் பாய்கருணை யுருவாய சின்மயன்
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்த் துறைசையம் பலவாண தேசிகன்
சப்பாணி கொட்டியருளே. 3

தூயதிரு வாதவூ ரடிகளின் னுங்கோவை
சொற்றிடுத லின்றுநன்று
சூழுமொரு மூர்த்தியின் னுங்கன்முன் கைமூளை
சொரிதரத் தேய்ப்பதின்று

மேயவொரு கண்ணப்ப ரின்னுங்க ணப்புவான்
விழியிடந் திடுதலின்று
மெய்க்குறிப் புத்தொண்ட ரினுமுத்த மாங்கங்கள்
மீதுமோ துதலுமின்று
பாயதிரி புரநீறு பட்டமையின் மாமேரு
பற்றிவாங் குதலுமாயப்
பகழிகோ டலுமில்லை சமயமிது போலுநேர்
படலரிது கருணைகூர்ந்து
தாயனைய சிற்பரன் றமரை மலர்க்கைகொடு
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்த் துறைசையம் பலவாண தேசிகன்
சப்பாணி கொட்டியருளே. 4

எள்ளருங் கைலாய வரைவீற் றிருந்தநாள்
இங்ஙனம் பாராட்டுதற்
கேற்புடைய வடிவமன் றென்றனை விடுத்தனம்
இருந்தவர்க ளுல்வரேத்த
விள்ளருந் தளிரால நன்னிழலு மொருகுந்த
மென்னிழலு மொருவரேத்த
வீற்றினி திருந்தநாள் சிலவன்றி யிலையென
விடுத்தனம் பல்லோர்தொழ
உள்ளரும் பேரருளி னிவ்விடத் துறையுநாள்
ஊழியினு மேலுமேலும்
உள்ளவென வோர்ந்திது துணிந்தன
மகிழ்ச்சியெளி யோங்கட்கு மேன்மேலுறத்
தள்ளருஞ் சுத்தமேற் சித்தாந்த சைவமணி
சப்பாணி கொட்டியருளே
தண்டமிழ்த் துறைசையம் பலவாண தேசிகன்
சப்பாணி கொட்டியருளே. 5

## வேறு

விண்டல ருந்திற மின்றி யெழுந்து
விளங்குறு தானவனை
வெய்யவ ஞகிய தங்கொழு நன்புடை
மேவு தொறும்பற்றித்
தண்ட லிலாதிடி செய்து பொடித்துத்
தாமரை மலரள்ளித்
தானெறி தரனே ராமென வெள்ளிய
தண்ணிய நீறள்ளி
அண்டல்செய் தொண்டர் தமக்கருள் கையால்
அருணை தயமெழுவாய்
அறுசிறு பொழுது மெருத்துரி போர்த்தி
யமைந்தவள் வார்முரசக்
கொண்டன் முழங்குங் கோகழி யூரன்
கொட்டுக சப்பாணி
குரவர் சிகாமணி யம்பல வாணன்
கொட்டுக சப்பாணி. 6

பாலம் பொலிதரு செங்க ணநங்கன்
படரா னமர்புரியும்
பான்மை குறித்தென வோவி யெழுந்தருள்
பண்ணவ நின்னமம்
ஞாலம் பொலிதரு குரவர்கள் யாவரும்
நன்கு நவிற்றலலால்
நாடி வரைந்து விடுத்திடு மாற்றல்
நமக்கிலை யென்றயரச்
சீலம் பொலிதரு பக்குவ ரஞ்செவி
செப்பி விடுத்தலொடும்
திசைதிசை செல்ல வரைந்தும் விடுத்திடல்
செய்யு மலர்க்கையினுல்

கோலம் பொலிதரு கோகழி யூரன்
கொட்டுக சப்பாணி
குரவர் சிகாமணி யம்பல வாணன்
கொட்டுக சப்பாணி. 7

நீடிய வன்பு நிகழ்த்திடு தொண்டர்
நெருங்கி வணங்குதொறும்
நிறைதரு திருவருள் பொங்குற நோக்குபு
நிலவுவெ ணகைசெய்து
நாடிய வன்னர் பசிப்பிணி யும்படர்
நல்கு முடற்பிணியும்
நாளும் விலங்க லிலாது பவம்புக
நாட்டு மலப்பிணியும்
ஓடி யவிந்திட வுண்கல சேடம
துதவு திருக்கையினல்
உறுவிடை யின்மையி னுமுறு வாமென
வுன்னுபு வானிடபம்
கூடிய மதில்சூழ் கோகழி யூரன்
கொட்டுக சப்பாணி
குரவர் சிகாமணி யம்பல வாணன்
கொட்டுக சப்பாணி. 8

பொருவாய் தரினு மிலாதவ னேனும்
போற்றி வளர்த்தமுனைப்
பொய்யில் பழக்கம் விடுத்தில னிங்குப்
போந்து மெனப்புகல
உருவாய் மையுந லொழுக்க விழுப்பமும்
ஒள்ளறி வுங்குண னும்
உண்மையு மோருபு நந்தி குலத்திற்
கொருகதிர் நீயென்று

திருவாய் மலருபு குறுநகை கொண்டொளி
திகழ்சுப் பிரமணிய
தேவனை முதுகுதை வருமலர் புரையும்
செங்கையி னுன்மணிசால்
குருவாய் மாடக் கோகழி யூரன்
கொட்டுக சப்பாணி
குரவர் சிகாமணி யம்பல வாணன்
கொட்டுக சப்பாணி. 9

சேர்ந்தறி யாநங் கைம்மல ரென்றுன்
றிருவாய் மலருதியேல்
தெளியா யாங்க டெளிந்திடு மாறு
சிறப்ப நினைப்பூசை
ஆர்ந்துமு னீயினி தாற்றிய துண்டே
அன்று குவித்துளையால்
அன்ன தயர்த்தனை கொல்லோ வின்றும்
அப்பரி சேநினையா
ஓர்ந்து முணர்ச்சி யிலாப்பர சமயர்
உரைத்திடு வார்த்தைகளுள்
ஒன்றும் பொருளல வென்றுகை தட்டுத
லொப்ப வுவந்தறிவு
கூர்ந்தவர் வாழுங் கோகழி யூரன்
கொட்டுக சப்பாணி
குரவர் சிகாமணி யம்பல வாணன்
கொட்டுக சப்பாணி. 10

# 5. முத்தப்பருவம்

கருகு மூல மலத்தினுயிர்
கலப்புற் றதுவே யகப்பந்தம்
கவற்று மாயை கன்மமொடு
கலந்த பந்த மகப்புறமாம்
பெருகு புறமாந் தனுகரணம்
பெற்ற பந்தம் புறப்புறமாம்
பிறங்கு புவன போகத்திற்
பிணைந்த பந்த மெனவிரித்தே
உருகு மடியர்க் கிரங்கியவை
யொழியு மாறு மின்பநிலை
உதிக்கு மாறு முண்மையினென்
றுபதே சிக்குந் திருவாயான்
முருகு மலியும் பொழிற்றுறைசை
முன்னோன் முத்தந் தருகவே
முத்தன் குருவம் பலவாண
முதல்வன் முத்தந் தருகவே. 1

தங்கு பருவ மறம்பாகம்
சத்தி பதிதல் வினையொப்புச்
சார்ந்து மலக்கட் டற்றுயிர்சுத்
தத்திற் றசஞ்செய் தத்துவிதத்
தெங்கு நிறைநம் மொடுங்கலத்த
லிதுவே யகச்சம் பந்தமரு
ளிடத்து நிற்ற லகப்புறமவ்
விலகு மருளி னுபகாரம்

பொங்கு மருடீர் தரக்காண்டல்
புறநாம் பிரம மென்றல்புறப்
புறமா மிவற்றுண் முன்னையதே
பொலியா நின்ற தென்றதனுள்
முங்கும் வகைசெய் தருடுறைசை
முன்னோன் முத்தந் தருகவே
முத்தன் குருவம் பலவாண
முதல்வன் முத்தந் தருகவே. 2

நாடு நிலமுன் னிருபத்து
நான்கு நாளம் வித்தையெட்டு
நறிய விதழ்க ளுலெட்டு
நாலெட் டாய கேசரங்கள்
நீடு மீசர் சதாசிவரே
நிகழும் சத்தி கேசரத்துள்
நிலவும் பொகுட்டு வடிவுசிவ
நிலைய வனைய பொகுட்டகத்துட்
கூடு மைம்பத் தொருபீசங்
குலாய விதய பங்கயத்தில்
குறிக்கு நந்தா ணிலையென்று
கொண்டா டெங்கட் கருள்வாயான்
மூடும் பொழில்சால் வளத்துறைசை
முன்னோன் முத்தந் தருகவே
முத்தன் குருவம் பலவாண
முதல்வன் முத்தந் தருகவே. 3

உற்ற விதய பங்கயத்தில்
ஓரைந் தெழுத்தா கியவடிவில்
உனைக்கொல் லாமை முதலெண்பூ
உறவம் மநுவா லருச்சித்தும்

பொற்ற வுந்தித் தலத்தழலைப்
பொலிய வெழுப்பி விந்துவகம்
புணராச் சியத்தை யிருநாடி
பொய்தீர் தரக்கொண் டோமித்தும்
செற்ற புருவ நடுச்சிவய
திகழு மூன்று பதப்பொருளாம்
திறமை நோக்கி யதனாலே
சிவோக மேபா வனைசெய்ய
முற்ற வுணர்ந்தார்க் கருடுறைசை
முன்னோன் முத்தந் தருகவே
முத்தன் குருவம் பலவாண
முதல்வன் முத்தந் தருகவே. 4

நகைசெ யுயிர்க ணசிக்குமெனின்
நசித்த லாலொன் றுவவில்லை
நசியா வென்னி லிரண்டுபட்டு
நம்மை யொன்று வனவல்ல
உகைசெ யருத்தா பத்தியால்
உப்புத் தனது கண்டிப்பை
யொழிந்து புனலி னொன்றுமா
றொப்பத் தமது சகசமலப்
பகைசெ யாற்றல் கெட்டொழியப்
பண்பி னொன்றி நங்கழற்குப்
பகருஞ் சேட மாமென்று
பரிவுற் றெங்கட் கருள்வாயான்
முகைசெய் பொழில்சூழ் தருதுறைசை
முன்னோன் முத்தந் தருகவே
முத்தன் குருவம் பலவாண
முதல்வன் முத்தந் தருகவே. 5

## வேறு

உண்ணீர்மை யுயிருணர்ந் துய்யவே தாகமம்
ஒருங்கெடுத் துப்புகன் றும்
ஓலமென் றபயமிடு நெடியமான் முதலமரர்
உய்யநஞ் சமிர் தமுண்டும்
புண்ணீர்மை யாயஞ ரழுந்துலக முய்யமுப்
புரநீறு படநகைத்தும்
புலவரொடு வழுதியு மயக்கந் தெளிந்துயப்
பொருண்மரபு முழுதுரைத்தும்
எண்ணீர்மை யார்க்குமதி மலிகொங்கு தேரெனும்
இயற்றமிழ்க் கவிபாடியும்
இரும்புகழ் படைத்தநின் செய்யவா யாங்களுய
இதுசெயிற் பழியாகுமோ
தெண்ணீ ருடைப்பொன்னி சூழுமா வடுதுறைச்
செல்வன்முத் தந்தருகவே
சின்மய னருட்பெருங் குரவனம் பலவாண
தேவன்முத் தந்தருகவே. 6

மிக்கதுவர் வாய்ந்தநம் மிதழ்முன் பொருத்திப்பின்
மேவக் குவிக்குமாருேர்
வேலைவந் ததுகொலென நின்றிரு வுளங்கொளேல்
விமலநீ கொள்வாயெனில்
தொக்கநின் பொதுநாம மாமைந் தெழுத்தினும்
சுடருஞ் சிறப்புநாமத்
தொகையைந் தெழுத்தினுமொ ரைந்தெழுத்
தென்னநவில் சூக்குமத் தினுநினடியார்க்
கொக்கமுத லயலா மிரண்டா மெழுத்தினை
ஒழித்தருளு வாய்கொலோசற்
றுரையொழித் தருள்வமெனின் முற்றுமுடியாதி
ஓர்ந்துபல மாளிகைதொறும் [தனை

செக்கர்மணி யிருள்பருகி யோங்குமா வடுதுறைச்
செல்வன்முத் தந்தருகவே
சின்மய னருட்பெருங் குரவனம் பலவாண
தேவன்முத் தந்தருகவே. 7

ஒளிவார் திருப்பனந் தாளின்முன் ஞளிலுள்
ளுருகிநி னடிப்பூசையாற்
றெருமாது சூட்டுபூ மாலையை விரும்பிநின்
உருவமிக வுங்குனிந்தாய்
அளிவார் மனத்தினெம் பாமாலை வேண்டுமேல்
அவ்வளவு குனியல்வேண்டா
ஐயசற் றேகுனிந் தெண்ணியதை யன்புடன்
அளித்தருள வேண்டுமின்னும்
வளிவார் பெரும்புவி தெரிக்கவவ் வணநிற்கின்
மாண்புடைக் கலயனுரை
மற்றெங் கியாஞ்சென்று தேடுவே மாதலால்
வளமிக்க கழகந்தொறும்
தெளிவார் குழாங்குழுமி யோங்குமா வடுதுறைச்
செல்வன்முத் தந்தருகவே
சின்மய னருட்பெருங் குரவனம் பலவாண
தேவன்முத் தந்தருகவே. 8

முன்னைநா ணின்னுல் வெலப்பட்ட கரிவன்றி
முதுமீன முதவுமுத்தும்
முண்டக மலர்த்தாளி லரைபட்ட வெண்மதிய
முத்துநஞ் சுணவுதந்த
புன்னைவாய் நெய்தற் கடற்றேன் று மிப்பிவளை
பொறையுயிர்த் திட்டமுத்தும்
பொருதிக லழிந்தகொக் குதவுமுத் துங்கொண்டு
பூணுத னினக்கேகடன்

என்னையோ துந்திற மெனிற்சின்ன மேற்றதார்
இந்நாளி லில்லையென்னில்
இலகுகண் மணிமாலை யிடையிடைக் கோத்திடுக
எண்ணில பழுத்தபாகல்
தென்னைமா வாதிபல சூழுமா வடுதுறைச்
செல்வன்முத் தந்தருகவே
சின்மய னருட்பெருங் குரவனம் பலவாண
தேவன்முத் தந்தருகவே. 9

பல்காலு நின்னைத் துதித்துநின் பதமுட்
பதித்துவாழ் வேங்களுக்குப்
பயனாக வொருதர மெனுந்தந் திடாயெனிற்
பல்வளப் பூவணத்தில்
அல்காத மாமைநிறை பொன்னனையண் முன்னைநாள்
அள்ளிமுத் தங்கொள்ளுமா
றளவளாய் மேயதை வெளிப்பட வுரைத்திடுவம்
அதனினு மிரங்காயெனின்
ஒல்காத மற்றவ ளுகிர்க்குறி கபோலத்தி
லுற்றது முரைத்துவிடுவோம்
ஒண்கதிர்ச் செல்வன்மதி யோனெனத் தண்
றுடம்புகூ னிக்கடந்து [ணென்
செல்காறும் வளைபொழி லுயர்ந்தவா வடுதுறைச்
செல்வன்முத் தந்தருகவே
சின்மய னருட்பெருங் குரவனம் பலவாண
தேவன்முத் தந்தருகவே. 10

5 MAY 1975

## 6. வாரானைப்பருவம்

உறந்தகதிர் மண்டிலத் துறைவது தெரிப்பதென
ஒண்மேனி சேயொளிசெய
ஓங்குமதி மண்டிலத் துறைவது தெரிப்பதென
ஒளிர்நீறு வெள்ளொளிசெய
அறந்தலை யெடுப்பவொளி ரிவ்வொளிக ளுறைக்கு
அடியர்மல பந்தமுழுதும் [தொறும்
அடலற வழித்தழி விலாதபே ரின்பநிலை
அருளிற் கொடுத்திடுதலால்
பிறந்தபிர தாபமும் புகழுமே யென்றறிஞர்
பேசிமகிழ் தூங்கவளவை
பேசிய துணர்ந்துநகை செய்தென முகத்துப்
பிறங்குபுன் மூரலென்றச்
சிறந்ததிரு வாவடு துறைக்கண்வளர் திருவருட்
செல்வப் பிரான்வருகவே
செம்மைதிகழ் சிவஞான வடிவனம் பலவாண
தேசிகோத் தமன்வருகவே. 1

உற்றபெரு மாதவ முனூற்றுநர்க் கல்லா
துனூற்றுதவ மொன்றுமில்லா
உவர்வருக வென்றழைத் திடநா மடைந்திடுதல்
உரிமையன் றென்றுநினையல்
பொற்றமதி நிலவுநக ரன்றிவெங் காட்டிலும்
புணரிவா யுண்டெழுந்த
புயன்மழை செழும்பணை நிலத்தன்றி யுவர்பற்று
புவியகத் தும்பொழியுமே

துற்றமலர் தளிர்மெத் தெனப்பரப் பினமுளத்
தூயர்கை கொடுக்கநின்றார்
தோலாத விருதுகளு மெதிரெடுத் தேநின்
றுணைத்தாள் பெயர்த்துவளமே
செற்றதிரு வாவடு துறைக்கண்வளர் திருவருட்
செல்வப் பிரான்வருகவே
செம்மைதிகழ் சிவஞான வடிவனம் பலவாண
தேசிகோத் தமன்வருகவே. 2

வருந்துத லிலாதுநின் றுள்பெயர்க் குந்தொறும்
வயக்கொடுங் கூற்றமுன்போல்
மார்பிடைத் தாக்குங்கொ லென்றஞ்ச நந்தலையில்
வைக்குநந் தலையில்வைக்கும்
பொருந்துவித மென்றுசில ருண்மகிழ் தரச்சிலர்
பொருந்துமென் பூத்தூவவப்
பூவினை மிதித்தல்வேள் கணையடிக் கீழ்ப்படப்
போகட் டடர்த்தலேய்ப்பக்
குருந்துநிழ லாளிவந் தானருட் சயிலாதி
குலமணி நமச்சிவாய
குரவன்வந் தானென்று சின்னங்க ளின்பெயர்
குறித்தூத வளவிலறமே
திருந்துதிரு வாவடு துறைக்கண்வளர் திருவருட்
செல்வப் பிரான்வருகவே
செம்மைதிகழ் சிவஞான வடிவனம் பலவாண
தேசிகோத் தமன்வருகவே. 3

பாங்குபெற வீரடி நடந்துநா லடியெனப்
படிறுரைத் தனைதக்கதோ
பார்முழுது நின்விடைக் கோரடி யெனப்பகர்தல்
பட்டாங்கு நீயுமுணர்வாய்

ஓங்குமகிழ் வெய்தவினு மோரடிநடந்திடுக
உள்ளடிகள் கன்றுமென்னில்
ஒருநாவ லூர்நம்பி வாட்டந் தவிர்ப்பதற்
கோரிராப் பொழுதினுப்பண்
வீங்குமிள முலையுடைப் பரவையார் மாளிகை
விழைந்துதிரு வாரூர்ப்பெரு
வீதியிற் பலகா லுழன்றதறி யேங்கொலோ
வேதா கமத்துநெறியே
தேங்குதிரு வாவடு துறைக்கண்வளர் திருவருட்
செல்வப் பிரான்வருகவே
செம்மைதிகழ் சிவஞான வடிவனம் பலவாண
தேசிகோத் தமன்வருகவே. 4

கள்ளுமண மும்பரவு மென்மலரில் வைக்கவும்
கன்றுநம் மடிகளென்னின்
கல்லுமுரு டும்பொருவு மெங்கடலை வைத்திடல்
கருத்திற் பொருத்திலாயென்
றுள்ளுதொறும் வெய்துயிர்ப் போங்குமது தீர்பொ
டுன்னடி பெயர்த்துவைக்க [ருட்
ஓரடி யெடுத்துவைத் திடுவமெனி லெங்களுக்
குதுபோது மிருதிறத்தும்
துள்ளுமகிழ் கொண்டியா மீரடி முதற்பலடி
தொக்கபா மாலையோடு
தோன்றவோ ரடியெனு மிலாதபூ மாலையும்
சூட்டுவேங் துறைகொள்பலநூல்
தெள்ளுதிரு வாவடு துறைக்கண்வளர் திருவருட்
செல்வப் பிரான்வருகவே
செம்மைதிகழ் சிவஞான வடிவனம் பலவாண
தேசிகோத் தமன்வருகவே. 5

### வேறு

ஒருவா ஞானங் கிரியையென்றும்
உடங்கு மறைக்குந் திரோதானம்
உவப்பப் பொலியு மனுக்கிரகம்
உண்மை யென்று மிவ்விரண்டா
மருவா நிறைநின் றிருவடியை
வகுப்பர் யாமு மிவ்விரண்டா
வருக வருக வெனவடுக்கி
மகிழ்ந்து விளிப்போ மாமேதி
பெருவாய் பாய விளவாளை
பிறங்கு கமுகிற் பாயவதிற்
பெயர்ந்து கருவா னரமெழுந்து
பெருங்கற் பகமேற் பாயவொளிர்
திருவா வடுதண் டுறையமருஞ்
செல்வன் வருக வருகவே
திகழ்சீர்க் குருவம் பலவாண
தேவன் வருக வருகவே. 6

ஒன்று நிறுவி யொன்றெடுத்தே
ஊழி பலகண் டம்பலத்துள்
ஒருவா தொருநீ நின்றமையின்
உற்ற வருத்தஞ் சிறிதுயிர்ப்பான்
நன்று புகறு மடிகள்சற்று
நடத்தல் வேண்டு மதின்வருத்தம்
நண்ணிற் றுயிற் றடையின்றி
நாயே முள்ளத் திருந்திடலாம்
துன்று கதிரோன் றேர்ப்பரிகள்
துளைந்து படர்வான் மணிமாடந்
தொறுநின் றிலகு துகிற்கொடிகள்
துளக்கும் வளியி னசைந்தசைந்து

சென்று புடைக்குந் துறைசையமர்
செல்வன் வருக வருகவே
திகழ்சீர்க் குருவம் பலவாண
தேவன் வருக வருகவே. 7

நல்லார் புகழுந் திருநாவ
லல்லூ ரகத்தி லவதரித்த
நம்பி யியற்று திருமணத்தில்
நாடி நின்னை யழைத்தவரார்
அல்லார் கண்ட மறைத்தெழுந்தாய்
அழையா திருக்க வடைந்தமையால்
ஆங்கு நிகழ்ந்த பெருஞ்சிறப்பும்
அடியோ மறைய வேண்டுவதோ
வல்லா ராய யாம்பலகால்
வருந்தி யழைக்க வாராமை
வழக்கோ வழைத்த படிவந்தால்
வாழ்த்தே பெறலா மையமில்லை
செல்லார் பொழில்சூழ் துறைசைவளர்
செல்வன் வருக வருகவே.
திகழ்சீர்க் குருவம் பலவாண
தேவன் வருக வருகவே. 8

தந்தைக் கொல்லைசெய் திட்டவர்க்கும்
தாயர்க் கொல்லைசெய் திட்டவர்க்கும்
தாரக் கொல்லைசெய் திட்டவர்க்கும்
தனயற் கொல்லைசெய் திட்டவர்க்கும்
முந்தைத் தொடர்பி னுறுங்கடும்பு
முழுதுங் கொல்லைசெய் திட்டவர்க்கும்
முந்தி முந்திச் செல்வையெம்பான்
முந்தி வருதற் கென்செய்தோம்

கந்தைக் கறுத்த கரடமதக்
களிற்றீ ருரியுண் மறைந்துகருங்
கடலுண் மறைந்த கதிர்கடுக்குங்
காட்சி கரந்து வெளிவந்து
சிந்தைக் களிப்பார் துறைசையமர்
செல்வன் வருக வருகவே
திகழ்சீர்க் குருவம் பலவாண
தேவன் வருக வருகவே. 9

முத்தன் வருக யாவருக்கு
முன்னோன் வருக முப்புவன
முதல்வன் வருக முன்னுரை
முன்னன் வருக மறைமுடிவில்
அத்தன் வருக வகாரவுயி
ரனையன் வருக நமவொழிக்கும்
ஐயன் வருக வகரமளித்
தருள்வான் வருக வாகமநூற்
கத்தன் வருக கருதுநர்தங்
கருத்தன் வருக கலப்புணர்த்தும்
கையன் வருக வருளுருவக்
காளை வருக கவின்றுபொலி
சித்தன் வருக கோமுத்திச்
செல்வன் வருக வருகவே
திகழ்சீர்க் குருவம் பலவாண
தேவன் வருக வருகவே. 10

# 7. அம்புலிப்பருவம்

கலையமைதி கொடுகடுங் காரிருள் கடிந்துபைங்
கழுநீ ருவந்திடுதலால்
காகோ தரத்துதர பந்தங் கழிந்துகதிர்
காலுரு வமைந்திடுதலால்
இலையமக் றண்ணளி யமைந்தெவரு மாலோ
னெனப்பொலி தருந்திறத்தால்
எழிலம்பு யங்கவிழ் தரக்கரந் தலைவைத்
திலங்குயிர்ப் பயிரருடலான்
மலைவரு கதிர்ப்பரிதி மண்டிலத் தெய்தலான்
மதியோ னெனப்பொலிதலான்
மானேந்தி யாகலா னெங்கள்குரு சாமிதனை
மானுவா யாதலாலே
அலைவிலா வடுதுறைச் சித்தாந்த சைவனுட
னம்புலீ யாடவாவே
அருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனெ
டம்புலீ யாடவாவே. 1

வண்ணமா மேருவை வளைத்தலாற் பன்னளு
மகிழப் பொலிந்திடுதலால்
வான்புலவர் பலர்சூழ் தரப்புது விருந்தாக
வாய்ச்சுவை மருந்துதவலான்
எண்ணலா காதசத் துவகுணப் பிரதானன்
என்னத் திகழ்ந்திடுதலால்
எக்காலு மிவருரிமை யாயவெறும் மிக்கவிமில்
ஏறுபுகர் கொளவிடுதலான்

மண்ணலால் வானகமு மேத்தவுய ரரசுநிழல்
வைகலா லெங்கள்குரவன்
வானகத் துலவுநினை நமையொப்ப னென்றுட
வருகவென் றுரைதலால்
அண்ணலா வடுதுறைச் சித்தாந்த சைவனுட
னம்புலீ யாடவாவே
அருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனொ
டம்புலீ யாடவாவே. 2

கூடுநாண் முப்பத்து மூவருக் கமுதுதவு
கொள்கையுடை யவனீயிவன்
குலவுபல நாள்கடொறு மெண்ணிலார்க் கமு
கொள்கையுடை யவனிதுவலான் [துதவு
மூடுபுற விருடபச் சிறிதுசிறி தாச்சில
முருக்கிவரு வாய்நீயிவன்
மொய்த்தவக விருள்வலி யொருங்குகெட் டொழி
முருக்கிவரு பவனுடலிலா [தர
நாடுமொரு பணிகொளப் பட்டுழல்வை நீயளவில்
நகுவலிப் பாம்புபூண்டு
நவையிலா னிவனிவனை நீயொப்ப தெங்ஙன்மதில்
நட்டகொடி வானளாவி
ஆடுமா வடுதுறைச் சித்தாந்த சைவனுட
னம்புலீ யாடவாவே
அருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனொ
டம்புலீ யாடவாவே. 3

துன்னவரு மடவார் குழாத்தனீ யிவனளவில்
தூயமா தவர்குழாத்தன்
தொக்கவொரு வருணமுடை யவனீ யிவன்
சூழுமை வருணமுடையான் [கருணை

நன்னரீ ரெண்கலேய னீயிவனெ ரறுபத்து
நான்குகலே யுடையனீயோர்
நகுமுய லுளாயிவன் விருதுமுதல் யாவையினு
நண்ணுபல சிங்கமுடையான்
முன்னவுங் கூடாக் களங்கனீ யெவருளமும்
முன்னுமக ளங்கனிவனுன்
முத்தனிவ னுக்குநினே யொப்பென மொழிந்
மூடருஞ் சிவலோகமே [திடார்
அன்னவா வடுதுறைச் சித்தாந்த சைவனுட
னம்புலீ யாடவாவே
அருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனெ
டம்புலீ யாடவாவே. 4

துலங்குபே ரருள்கொளுவி மலமாயை கன்மம்
தொலேத்தள விலாதவின்ப
சுகவாரி யெவ்வுயிரு மூழ்கச் செயுங்குரவர்
சூளா மணிக்குநாளும்
கலங்குநிலே யுடையையாய்க் குரவனில் விழைந்துபழி
கைக்கொண்ட பாவியாய
காமுகா நின்னேயொப் பென்றவெம் வாய்க்கு
கழுவா யியற்றல்வேண்டும் [மொரு
இலங்குநெடு மாதவர்கள் பல்லா யிரங்கோடி
யென்னவய னிற்கநின்னே
இவன்வருக வென்றுகட் டளேயிட்ட னன்கருதின்
எத்தவ மியற்றினுய்முன்
அலங்கும்ா வடுதுறைச் சித்தாந்த சைவனுட
னம்புலீ யாடவாவே
அருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனெ
டம்புலீ யாடவாவே. 5

செய்யநங் குருநாத னிணையாட வாவென்று
திருவாய் மலர்ந்தபொழுதே
திருந்தக் குடந்தமுற் றடியனேன் வந்தனென்
திருவுள மெவன்கொலென்று
நையளவும் விரையவந் தான்றதிரு வடிபணியின்
நகுகருணை பூத்துநீறு
நளினத் திருக்கரத் தள்ளியுன் னுதலிடுவன்
நாடுமப் பெரியபேற்றால்
வெய்யநின் கயரோக மும்பழியு மாறியுயர்
மேன்மையும் பெறுவைமுன்போல்
மேவமுடி வைத்திடினும் வைக்கும் பெருங்கருணை
விள்ளத் தெரிந்தவர்கள்யார்
ஐயனா வடுதுறைச் சித்தாந்த சைவனுட
னம்புலீ யாடவாவே
அருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனொ
டம்புலீ யாடவாவே. 6

போற்றுநாம் வருகென் றழைத்தபொழு தெய்திலான்
புகரிவ னெனத்திருக்கண்
போதச் சிவந்துழிக் குரவற் பிழைத்ததன்
புகரெண்ணி யிருவினைகளும்
காற்றுதிரு முன்னர்வர வஞ்சினா னென்றருகு
கவினமே வுற்றவனையான்
கண்மணியை யனையசுப் பிரமணிய தேவனக்
கண்சிவப் பாற்றுவித்தான்
மாற்றுவா ணின்னமு மெனத்தா மதிப்பையேல்
மற்றவனு மனையனவன்
வாழ்வகை நினக்குமப் பாலுமுண் டோசெம்
மாடமுடி மேலண்டம்வைத் [பொன்

ஆற்றுமா வடுதுறைச் சித்தாந்த சைவனுட
னம்புலீ யாடவாவே
அருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனெ
டம்புலீ யாடவாவே. 7

தீட்டுமா புகழுடைச் சின்மய னிவன்கலச்
சேடமுகி லினுமுன்னைநாள்
சேர்ந்துநீ ருவரகற் றியபழங் கதையமரர்
செப்பத் தெரிந்திலாயோ
கூட்டுமிப் போதுமச் சேடமணு வத்தனை
கொடுத்திடப் பெற்றுமெனின்
கொடியகய நோயழிவ தற்கைய மில்லையிக்
கூற்றுண்மை யென்றுணர்தியால்
ஈட்டுமா பாதகமும் வேறிடம் பார்க்குமினி
யாஞ்சொன்ன வழிவருதியேல்
எய்தாத மேன்மையில மாடத் துகிற்கொடி
எழுந்தசைந் தைந்தருவையும்
ஆட்டுமா வடுதுறைச் சித்தாந்த சைவனுட
னம்புலீ யாடவாவே
அருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனெ
டம்புலீ யாடவாவே. 8

எங்கணு யகன்வருதி யென்றபடி வாரா
திருத்தியேல் வெய்யசாபம்
இடுவனச் சாபநின் குரவனிடு சாபமென்
றெண்ணுதி யதுவாழ்த்ததால்
வெங்கணு டரவவ னணிந்தவைகள் பலவுண்டு
வெய்துயிர்த் தொன்றைநோக்கின்
விரையவந் துன்னைப் பிடித்துக் கடித்துடன்
விழுங்கியிடு மீளாமலே

திங்கணு யகயா முரைப்பதுவும் வேண்டுமோ
சிறுவிதி மகச்சாலையில்
தேய்ப்புண்ட தத்தனையு மின்றயர்த் தாய்
செங்கண்மால் கைகுவிக்கும் [கொலோ
அங்கணு வடுதுறைச் சித்தாந்த சைவனுட
னம்புலீ யாடவாவே
அருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனெ
டம்புலீ யாடவாவே. 9

வார்க்குங்கு மக்கொங்கை யுமையாள் பசுக்கோல
மாற்றிமுற் கோலமுதவு
மாத்தல மிதன்கணெளிர் குருதரிச னங்கருது
வார்க்குமள வாதவின்பம்
போர்க்குமொரு சிவலிங்க தரிசன மருட்பெருமை
பூண்டசங் கமதரிசனம்
பொற்பக் கிடைக்குமித் தலமனைய தலமெவண்
போய்ப்பெறுவ தோதுமதியே
சீர்க்குமொரு நவகோடி சித்தபுர மென்பதும்
தேர்ந்திலாய் தேருமாறு
செப்பவுந் தேர்கிலா யிதுநன்மை யன்றெழு
திரைக்கட லெனப்பன்முரசும்
ஆர்க்குமா வடுதுறைச் சித்தாந்த சைவனுட
னம்புலீ யாடவாவே
அருணெறி நடாத்துமம் பலவாண தேசிகனெ
டம்புலீ யாடவாவே. 10

# 8. சிற்றிற்பருவம்

உருவார் மதிய மிளங்காலை
உதிப்ப தெவனென் றுன்னிமயக்
குற்றுக் கணப்போ திருந்தனம்பின்
உணர்ந்தோம் வேடப் பொலிவதன்பின்
மருவா ராத்த மாலைதுயல்
வருதோ ளொருநீ யெனத்தெளிந்தோ
மற்றப் பொழுதே விரைந்தெழுந்து
மகிழ்ந்து பணிந்தோ நீறளித்தாய்
வெருவார் கண்ட வுடனெழுதன்
மேவா ரென்று திருவுளத்து
மிக்க சினங்கொண் டிதுசெய்தல்
மேலாம் பெருமைக் கழகேயோ
திருவார் துறைசை வளர்ஞானச்
செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண
தேவா சிற்றில் சிதையேலே. 1

ஒளிசா னின்து வருகையுளத்
துவந்தோம் யாங்கள் வகுத்தவறை
ஒன் றுளிருத்தி யெனமுகமன்
உரைத்தோ மதனுக் கெங்கள்சித்தர்
அளிசா லருளின் வகுத்தவறை
அன்றென் றொழித்தா யடுமணற்சோ
றைய வுண்க வெனநமக்கிங்
காகா தாநம் விடைக்கென்றாய்

களிசால் யாங்க ளினிச்செய்யக்
கடவ தொன்று மிலையடிகள்
கருத்தி லென்னோ நினைந்தீது
கருதின் யாங்கள் செயலென்னே
தெளிசா றுறைசை வளர்ஞானச்
செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண
தேவா சிற்றில் சிதையேலே. 2

ஆரும் புழுதி யறப்புனல்கொண்
டாட்டித் திருவொற் றுடையிடற்
கடியார் பலரு ளாரெனின்வே
றளைந்து சென்று லாகாதோ
பேருஞ் சிறியோ மியற்றுவது
பேணுச் சிறுவீ டாதலினால்
பெரியோ யொருநீ யியற்றுவது
பேணும் பெருவீ டாகியதால்
ஓரு மிதுவு நின்னடிமண்
உரினு மதனாற் கன்றுவதும்
ஒருங்கி யாங்கள் வருந்துவதும்
உணரா திருத்த லருளன்றே
தேருந் துறைசை வளர்ஞானச்
செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண
தேவா சிற்றில் சிதையேலே. 3

அருந்து பதம்பார்த் தோருவேடன்
அமைத்துக் கொடுத்த வூனெச்சில்
அடங்க நுகர்ந்து முடியிலவன்
அடிசூட் டிடவு மமைதரவேற்

றிருந்த துரையா இனையவனுண்
டிட்ட சேட மெடுத்துதவி
எல்லார் முடிக்கு மடிசூட்டும்
என்று புகன்றோ மிதுபிழையோ
வருந்து மெமது விண்ணப்பம்
மரும லேற்க வேலாயேல்
மன்னு மருளி லானெனநின்
மாணுக் கருக்கெல் லாமுரைப்போம்
திருந்து துறைசை வள்ஞானச்
செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண
தேவா சிற்றில் சிதையேலே. 4

ஐய முன்னைப் பழக்கநினைந்
தழிப்பே னென்னி லுலகுயிர்கட்
கமைந்த மலமா தியமூன்று
மடங்க வழித்தி யடுகாமம்
வெய்ய குரோத முதலாறும்
வீட வழித்தி நினையன்றி
வேறும் பொருளுண் டென்றுரைக்கும்
வீணர் மதமு மறவழித்தி
வைய முவக்கு மிவையன்றி
மதியா யாங்க ளாட்டித்து
வந்து வகுப்ப தழித்தனையேல்
வருவ தறமோ மாப்புகழோ
செய்ய துறைசை வள்ஞானச்
செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண
தேவா சிற்றில் சிதையேலே. 5

எல்லார் தமக்கு மனுக்கிரகம்
இயற்று வோமென் றொருபெயரிட்
டிங்கு மேவி யெங்களிடத்
தென்னே வழித்தற் றொழில்பூண்டாய்
வல்லா ரெதுசெய் யினுஞ்செயலாம்
மறுப்பா ரொருவ ரின்மையினுல்
வல்லார் வாளா விருப்பதல்லால்
வாய்பே சுதற்கும் வழக்குண்டோ
வில்லார் மணிமா ளிகைகடொறும்
விளங்கா நின்ற நலநோக்கி
விண்ணோர் கண்ணே றுருவண்ணம்
விரித்துப் பொருத்து முறையேபோல்
செல்லார் துறைசை வளர்ஞானச்
செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண
தேவா சிற்றில் சிதையேலே. 6

கூறு முலகர் விரும்புபெருங்
குரவர் பெருமா னீயென்னில்
குலவ நினைக்காண் டொறும்யாங்கள்
கும்பிட் டிடுவோ மதுவன்றி
வேறு தனித்து மொழிந்திடினும்
விரும்பிக் கேட்போ மினிதியற்றும்
வீட்டை யழிப்பான் றொடங்கினையேல்
விதியா காது பொறுத்திருத்தல்
நாறு மலர்ப்பைம் பொழிறோறும்
நகுபைங் கிளியா கமங்கூற
நச்சு பூவை யுணர்ந்துகற்ப
நண்ணுங் குயில்கட் கினிதோதத்

தேறுந் துறைசை வளர்ஞானச்
செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண
தேவா சிற்றில் சிதையேலே. 7

கோணர் பிறையுங் கழிதலையுங்
கொன்றைத் தொடையும் புலித்தோலும்
குலவு நுதற்க ணெடுபிறவுங்
கூடா தொழித்துச் சுவேச்சையினேர்
ஏணு ருருக்கொண் டிங்கடைந்த
திறைஞ்சு மவர்கட் கருள்வதற்கோ
எங்கள் சிறுவீ டழிப்பதற்கோ
இயம்பல் வேண்டு மிறையோனே
பூணர் முலைநன் மடமாதர்
புணர்மா ளிகையிற் சூளிகையிற்
பொருத்து மணிச்செங் கதிரெழுந்து
போய்வெங் கதிர்க்கு மாறுகச்
சேணர் துறைசை வளர்ஞானச்
செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண
தேவா சிற்றில் சிதையேலே. 8

மாலா ரிளைய மகனைய
மதவே ளுடம்போ கற்பகஞ்சால்
வான்கூட் டுண்ணுந் திறலவுணர்
வாழ்ந்த கொடிய முப்புரமோ
பாலா ரயன்மா லொடுங்கவரும்
படர்பே ரூழிப் புவனமோ
பரவு மடிகள் பொருளாகப்
பற்றி யழித்தல் செய்வதறகுக்

கோலார் வளைக்கை மடவார்யாங்
குழுமி யியற்று மிதுகுளிர்பூங்
கோலப் பொழில்சூழ் வாவியினுங்
குளிரோ டையினுந் தாயெழுந்து
சேலார் துறைசை வளர்ஞானச்
செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண
தேவா சிற்றில் சிதையேலே. 9

வீங்கும் விருப்பின் யாங்களணி
வீதி யிடத்தி னியற்றுமிதின்
மேவுஞ் சுவரச் சிறுவிதிசெய்
வேள்விக் களமே கலையன்று
தாங்கு மிதனுட் செம்மணிகள்
தயங்கு மதனுட் டழலன்று
தழையா நின்ற வெங்குழுவத்
தக்கன் மகத்திற் குழுவன்றே
பாங்கு பெறவா லடிக்குரவு
பயின்ருற் போல வடுதொழில்யாம்
பயில்வோ நினையாந் தடுத்திலமிப்
பண்பு தகவோ பலவளமும்
தேங்குந் துறைசை வளர்ஞானச்
செல்வா சிற்றில் சிதையேலே
சிந்தா மணியம் பலவாண
தேவா சிற்றில் சிதையேலே. 10

# 9. சிறுபறைப்பருவம்

விரைவீசு தாமரைப் பூவொத்த செங்கரம்
விளங்குமொரு தமருகத்தை
மேவத் திரித்துவடி வொடுநிறமு மொத்தலான்
மேதினி யெலாம்பரந்து
நுரைவீசு கங்கையொடு நட்புற் றுறும்பிறையை
நோன்மையரு ளிற்றிரித்து
நுவலுமிப் பறைகுணி லெனக்கொண் டுளாய்
நோக்கியுல கேத்தெடுப்ப [கொலென
வரைவீசு வெள்ளொளிய வயிரமும் பாசொளிய
மரகதமும் வாரிவாரி
வண்குலைப் படுகரிடை மேயும்வளை கோட்டெரு
வாய்வெரீஇ யோட்டெடுப்பத் [மை
திரைவீசு பொன்னிவளை சென்னிவள நன்னுடை
சிறுபறை முழக்கியருளே
சித்தர்பலர் மொய்த்தகோ முத்தியம் பலவாண
சிறுபறை முழக்கியருளே. 1

அறிவிலே மிந்திரிய மாவேட்ட மாடுதற்
கமைகுறிஞ் சிப்பறையுமாய்
அடங்காத மனமென்னு மிமிலேறு கோடற்
கடுத்தமுல் லைப்பறையுமாய்
முறிவிலுடல் பொருளாவி கொள்ளைகோ டற்குற
முழக்குபா லைப்பறையுமாய்
மூதுணர் வெனும்புன லருதுற வொழுக்கற்கு
மொய்த்தமரு தப்பறையுமாய்

மறிவிலெம ரொட்டுமாறு கொண்டபர சமயர்கோண்
மாய்க்குநெய் தற்பறையுமாய்
மாருது பொலியவரை நின்றிழிந் தெஞ்ஞான்றும்
வற்றுத லிலாதவெப்பச்
செறிவிலுயர் பொன்னிவளை சென்னிவள நன்னுட
சிறுபறை முழக்கியருளே
சித்தர்பலர் மொய்த்தகோ முத்தியம் பலவாண
சிறுபறை முழக்கியருளே. 2

ஓங்குபல புவனத் திளைப்பாற்று முன்னிஃ
தொலிப்பதெவ னென்றுகருதி
உணர்வுடைய ருண்மயங் கினுமயங் குகபின்
புணர்ந்திஃ தெனத்தெளிவரால்
வீங்குபே ரறிவுடைப் பாணினியு முன்போல்
வியாகரண வாஞ்சையுற்று
மேவிடினு மவனுமிஃ திற்றெனத் தேர்குவன்
விளங்குகுணில் கைப்பற்றியே
வாங்குதிரை மால்யானை பற்பல வெடுத்துநால்
வாயரற் றிடவெறிந்து
வரைபல வுருட்டிக் கடுத்துப் புகுந்துவரு
மறிதிரைக் கடல்கலக்கித்
தேங்குநீர்ப் பொன்னிவளை சென்னிவள நன்னுட
சிறுபறை முழக்கியருளே
சித்தர்பலர் மொய்த்தகோ முத்தியம் பலவாண
சிறுபறை முழக்கியருளே. 3

இருளின்விழி போற்கேவ லத்திற் கிடந்தநுமை
யின்னருளி னுடல்விளக்கம்
ஏய்ப்பவது வாய்வினை வயிற்படர்ந் தீர்பின்னும்
எய்த்துமெய் யாதுநாளும்

பொருளற முனூற்றப் புரிந்திரு தளைச்செறிவு
பூணாது கீழ்ப்படுத்தப்
புகறத்து வத்துருக் காட்சிசுத் தியுமுறப்
பொலிதரு நுமைக்கண்டுநீர்
மருளமை செருக்குறுதன் மாற்றவரு ஞேக்கிவினை
மற்றைறந்தி னெழுதறவிர
மன்னுமருண் முதலெனக் கண்டொன் றுரு
வம்மினென் றறிவித்தல்போல் [தொன்ற
தெருள்விரவு பொன்னிவளை சென்னிவள நன்னுட
சிறுபறை முழக்கியருளே
சித்தர்பலர் மொய்த்தகோ முத்தியம் பலவாண
சிறுபறை முழக்கியருளே. 4

மதிசெயுஞ் சித்தாந்த சைவவசு ணங்கட்கு
வரியாழ் முழக்கமெனவும்
வளமருவு சுத்தசை வப்பயிர் களுக்குநெடு
மாமழை முழக்கமெனவும்
விதிசெயுங் கிரியா குருக்களர வங்கட்கு
விழைமயின் முழக்கமெனவும்
வெய்யபர சமயப் பருத்திப் பொதிக்கழலும்
வெவ்வழன் முழக்கமெனவும்
நிதிசெயு மணிக்குவை களுஞ்சந் தனக்குறடு
நீளகிற் றுணியும்யானை
நிகரில்வெண் கோடுகளும் வரைநின் று வாருபு
நிலந்தொறு மெறிந்தியாரையுந்
திதிசெயும் பொன்னிவளை சென்னிவள நன்னுட
சிறுபறை முழக்கியருளே
சித்தர்பலர் மொய்த்தகோ முத்தியம் பலவாண
சிறுபறை முழக்கியருளே. 5

வேறு

புத்தமு தோவென மெய்த்துதி பாடிப்
புந்தி விரும்புநரும்
புகாற வோர றுகாலமு மெண்ணிப்
போற்றி வணங்குநரும்
சித்த மிருத்தி விடாம லருச்சனை
செய்து மதிப்பவரும்
செங்கை குவித்தரு கெய்தி யடிப்பணி
செய்யும் விருப்பினரும்
அத்த வருட்கண் வழங்கென நின்றெதிர்
ஆடி வழுத்துநரும்
ஆகிய பற்பல செந்தா மரைகள்
அலர்த்து மிளங்கதிரே
முத்தமிழ் தேர்துறை சைப்பதி வாணன்
முழக்குக சிறுபறையே
முத்தி முதற்குரு வம்பல வாணன்
முழக்குக சிறுபறையே. 6

மருவிய வாசைப் பேயை யொழித்திட
மந்திர வாதியுமாய்
மாருப் புண்ணிய மகவு வளர்த்திட
வாய்ப்புறு மன்னையுமாய்ப்
பொருவி லிடும்பைச் சேறு புலர்த்தப்
பொலிதரு பருதியுமாய்ப்
போர்த்திடு பரசம யக்களி றுழியப்
போதரு சிங்கமுமாய்
வெருவரு வெய்ய வினைக்கா டொழிதர
வெய்தெழு வன்னியுமாய்
விடாத பவக்கட் செவியொழி யப்புள்
வேந்தனு மாய்ப்பொலிவாய்

முருகலர் நீர்த்துறை சைப்பதி வாணன்
முழக்குக சிறுபறையே
முத்தி முதற்குரு வம்பல வாணன்
முழக்குக சிறுபறையே. 7

மன்னிய நாமே பரசிவ மென்றும்
வயங்குநம் மடியாரை
வழிபடு மதுவே நம்மடி யடைதரு
வழியென் றுங்கருணை
துன்னிய நந்திரு நாமம தேயருள்
தொகுமந் திரமென்றும்.
துயரம் வருத்து மவாமுத லடலே
தோலா வலியென்றும்
பின்னிய நந்திரு வருளா னம்மொடு
பெயரா தொன்றுதலே
பேரின் பென்று மெமக்கரு ளிப்பணி
பேணிக் கொண்டருள்வோய்
முன்னிய வண்டுறை சைப்பதி வாணன்
முழக்குக சிறுபறையே
முத்தி முதற்குரு வம்பல வாணன்
முழக்குக சிறுபறையே. 8

பெய்வள மாரி யெழுங்குமி ழிக்கிணை
பெற்ற வுடற்கணருப்
பெட்பினர் வெய்ய சினக்கனல் பொங்கப்
பெறுகொடு மனமுருடர்
பொய்வள நாடுபு செந்நில நீரிற்
போர்த்த மயக்கமுளார்
பொல்லா ரிவர்தமை யாளுத லாலாம்
புகழென வுட்கொண்டு

மெய்வள மார்கரு ணைத்திறம் யாரும்
வெளிப்படை யாலுணர்வான்
வெய்யே மையுமினி தாண்டருள் குரவா
மேலோர் பலர்சூழ
மொய்வள மார்துறை சைப்பதி வாணன்
முழக்குக சிறுபறையே
முத்தி முதற்குரு வம்பல வாணன்
முழக்குக சிறுபறையே. 9

வாரி யுடுத்த புவிக்கண் விபூதி
வயக்குத லிலராயும்
மன்னிய புண்ணிய மேய்க்குங் கண்மணி
வாஞ்சை யுறாராயும்
சீரிய வக்கர மைந்து நவிற்றுதல்
தேறு தொழிவாரும்
திகழ்தரு நின்னடி யார்த மடிப்பணி
செய்யா தகல்வாரும்
ஆரியர் கோவென நின்னடி சார்ந்துநின்
அருள்முக மேலாரும்
ஆகிய முருடர் கவுட்புடை யொப்ப
அலங்குபொ ஞலாய
மூரி மதிற்றுறை சைப்பதி வாணன்
முழக்குக சிறுபறையே
முத்தி முதற்குரு வம்பல வாணன்
முழக்குக சிறுபறையே. 10

# 10. சிறுதேர்ப்பருவம்

பருந்துபல சூழப் புலால்கமழும் வெம்படைப்
பருவலித் தருவர்மூவர்
பற்றியமர் சூக்கும வுடம்பனைய திரிபுரப்
பாழிமுற் றுங்கெடுப்பான்
பொருந்துவட மேருவில் வளைத்தரவு நாண்கொளீஇப்
பொருகடல் சுவற்றுவாளிப்
பொருகணை கரங்கொண்டு நான்மறைப் பரிமலர்ப்
புத்தேள் கடாவிநிற்ப
மருந்துபடு மதியமும் பருதியுஞ் சகடாய்
வயங்கக் கொடிஞ்சிமுதலா
மற்றுள வுறுப்புமற் றுளதேவ ராகநெடு
வாழ்த்துமல் குறவிவர்ந்து
திருந்துபுவி யாகிய பெருந்தே ருருட்டினேன்
சிறுதே ருருட்டியருளே
செல்வமலி துறைசையம் பலவாண தேசிகன்
சிறுதே ருருட்டியருளே. 1

வெய்யவெங் கானந் திரிந்துழன் றுங்கரு
விழிச்செய்ய வாய்த்தொறுவிமார்
வெள்வளைக் கையகப் பட்டிளங் கன்றணைதன்
மேயதிரி புரிநாரினல்
வையமிது வென்னெனக் கட்டுண்டு முட்டுண்டு
மத்தின்மொத் துண்டுவண்டு
வார்திரை யெடுத்தெறியு மார்கலியி னேடிவெரிந்
வானநோக் காதுவீழ்ந்தே

எய்யவவ ணின்றின்னு நீங்கா துறங்குமோர்
எருதேறி யதுவன்றியும்
என்சொல்வ லதுவுண்ட மண்ணுய தேரேறி
என்னுமோர் சிறுமைதீரச்
செய்யபொன் செய்துபல மணிவைத் திழைத்திட்ட
சிறுதே ருருட்டியருளே
செல்வமலி துறைசையம் பலவாண தேசிகன்
சிறுதே ருருட்டியருளே. 2

உருகுமன முடையராய்ப் பல்லோர் நடாத்துவதின்
உறுமழகு நோக்கநின்ருர்
உற்றவவர் கட்குமெங் கட்குமகிழ் பூப்பநீ
ஒள்ளிதி னடாத்தல்வேண்டும்
பெருகுமெழி லோடிவர்ந் தினிநடத் தோமெனிற்
பேசுபல் வடங்கழற்றிப்
பெருந்தேர் நடாத்தியரு டிருமாளி கைத்தேவர்
பேணுசந் நிதியடைந்தே
அருகுசில விண்ணப்பம் யாங்கள்செய் வோமென்னில்
அவர்தா நடாத்துதற்கோர்
ஐயமிலே யாமே நடத்தின மெனும்புகழ்
அடைந்திடுவை சொற்றபடிகேள்
திருகுதவிர் பவருளத் தறிவுருவின் மேவுவோன்
சிறுதே ருருட்டியருளே
செல்வமலி துறைசையம் பலவாண தேசிகன்
சிறுதே ருருட்டியருளே. 3

துணைவந்த குஞ்சரமு மழகிய வுவாவுந்
துலங்குமிந் நகரிடத்துத்
துண்ணெனமு னச்சிறுத் திட்டகளி றிலேயது
துணிந்திங்கு வருவதுமிலேப்

பணிவந்த கைத்தலத் ததுவந்து மேவினும்
பனிமல ரிறைத்தெண்முதலாப்
பலவுற்ற சுவையமோ தகமாதி வீசிப்
பணிந்துவச மாக்கிவிடுவோம்
இணைவந்த பொருளென்று நீயுப சரிப்பதொன்
றில்லாமல் யாமாதலால்
இடையூறு வேறின்று சிறுவி டியற்றுமதன்
இனமாகு மாதர்விலகத்
திணைவந்த வளமல்கு சோணு டளிப்பவன்
சிறுதே ருருட்டியருளே
செல்வமலி துறைசையம் பலவாண தேசிகன்
சிறுதே ருருட்டியருளே. 4

வாணுடு மேவும் புறத்தொண்டர் சொற்றபடி
வையமு நடாத்திஞயிம்
மண்ணுடு மேவிய வகத்தொண்ட ரேம்யாம்
வகுத்தபடி கேளாமையென்
காணுடு மதுசொற்ற படிநடத் தோமெனிற்
கைகுவித் தெய்திநினது
கண்மணியை யனையசுப் பிரமணிய தேவன்முன்
கரைவோங் கரைந்தபொழுதே
பாணுடு மனையனின் பால்வந் துரைக்கினெப்
படிமறுத் திடுவையனைய
பக்கநீ தவிர்வதே யில்லயாத லால்யாம்
பகர்ந்தபடி கேட்டல்வேண்டும்
தேனுடு பூம்பொழிற் சோணு டளிப்பவன்
சிறுதே ருருட்டியருளே
செல்வமலி துறைசையம் பலவாண தேசிகன்
சிறுதே ருருட்டியருளே. 5

முதையாய வெங்கண்மன மாம்புலத் திற்காம
முதலாய பெருமரங்கள்
முழுதுமற வருளாய தழல்கொளுவி யைந்தென
முழங்குமக் கரமனுவெனு
மதையா யலப்படை யெனக்கொண் டுழச்செயா
அன்பெனும் வித்துவித்தி
ஆர்வநீர் பாய்த்தியன் னியசமய மாக்களட
ராதுபொறை வேலிகோலிப்
பதையாத தவமெனும் பைம்பயிர் வளர்ந்துபொய்
படாதசிவ போகம்விளையாப்
பண்பினுகர் காறும்விட யக்கரவர் கவருதல்
படாதுகாத் தருள்சின்மயன்
சிதையாத வளமல்கு சோணு டளிப்பவன்
சிறுதே ருருட்டியருளே
செல்வமலி துறைசையம் பலவாண தேசிகன்
சிறுதே ருருட்டியருளே. 6

முந்தைமறை யாகம நவின்றரு ணினக்கியாம்
முந்துபு நடத்தல்செய்யேம்
முந்துபு நடப்பவர் நடந்திடுக விதுகாறும்
முந்துபு நடத்தலாலே
அந்தைபடு பிறவித் துயர்க்கட லழுந்தினம்
அதாஅன் றுபுற முதன்மையேபோல்
ஐயவக முதன்மையு நினக்காக நல்குவான்
அடியே மமைந்துநின்றேம்
நிந்தையறு மெங்கள்செய லிற்ருக லாற்பின்பு
நேயத் தொடுந்தொடருவேம்
நிறைகருணை பூத்தியா வருமன மகிழ்ச்சியுற
நிகழ்காம மாதிதீர்ந்த

சிந்தைகுடி கொண்டுசுடர் விட்டோங்கு சின்மயன்
சிறுதே ருருட்டியருளே
செல்வமலி துறைசையம் பலவாண தேசிகன்
சிறுதே ருருட்டியருளே. 7

அணிகொண்ட முன்னு ணடாத்தியது பொன்னிற
மமைந்ததிது முழுமையும்பொன்
ஆழிநின் கைகா லடர்ப்புண்ட விதனின்மரு
வாழியத் தகையவலவான்
மணிகொண்ட வச்சுமுறி பட்டதது விதுவன்மை
மாருத தென்றுமத்தேர்
வண்மையிற் ருகவு முளஞ்செருக் கிக்கடினம்
வாய்ந்தன மெனப்பொலியுமால்
பணிகொண்ட வதனுட் செருக்ககலும் வழியெனப்
பகருமதன் மார்புகீண்டு
படரும்வெளி யாகவிது நோக்கிமகிழ் தருமெங்கள்
பாழிமல மாயைகன்மத்
திணிகொண்ட மும்மதிலு நீறெழச் சின்மயன்
சிறுதே ருருட்டியருளே
செல்வமலி துறைசையம் பலவாண தேசிகன்
சிறுதே ருருட்டியருளே. 8

ஒருநாம மும்பெறுவ தில்லைநா மென்றுமு
னுரைத்தனை யதற்குமாரு
உலவாப் பெருங்கருணை வெள்ளமலை யெறிதலா
லுணர்விலெளி யேமுமுய்வான்
தருநாம நந்தியங் குமரர்சத் தியஞான
தரிசனி பரஞ்சோதியார்
தழைதருமெய் கண்டவர்ந லருணந்தி மறைஞான
சம்பந்தர் கொற்றவனெனும்

பெருநாம நல்லூ ருமாபதி சிவன்கருணை
பெருகரு ணமச்சிவாயர்
பிரகாச ரைந்தெழுத் திறைமுனிரு பத்தைந்து
பெயர்கொண்ட தன்றியின்னும்
திருநாம மெண்ணில புனைந்துவரு சின்மயன்
சிறுதே ருருட்டியருளே
செல்வமலி துறைசையம் பலவாண தேசிகன்
சிறுதே ருருட்டியருளே. 9

ஆவாழ்க மாமறைக் குலம்வாழ்க நலமாரும்
ஆகமத் திரள்கள் வாழ்க
அருண்மல்கு சித்தாந்த சைவநலம் வாழ்கநினை
அன்பிற் புகழ்ந்துபாடும்
நாவாழ்க நின்றிரு வடிப்பணி புரிந்திடு
நன்மலர்க் கைகள்வாழ்க
நண்புற விராப்பக னினைக்குமனம் வாழ்கவிறை
நடவுசெங் கோலும்வாழ்க
மாவாழ்க வெவ்விடனு மேவிமதி தோறும்
மழைபொழிய மேகம்வாழ்க
மன்னுபைங் கூழ்வாழ்க வெவ்வுயிரும் வாழ்கநின்
வயங்கூர்தி யாயதருமச்
சேவாழ்க சைலாதி சந்தானம் வாழ்கநீ
சிறுதே ருருட்டியருளே
செல்வமலி துறைசையம் பலவாண தேசிகன்
சிறுதே ருருட்டியருளே. 10

**ஸ்ரீ அம்பலவாணதேசிகர்பிள்ளைத்தமிழ் முற்றிற்று.**

# *சிறப்புப்பாயிரம்

இந்நூலாசிரியர் மாணுக்கரும்

சங்கரலிங்கம்பிள்ளையவர்கள் குமாரருமாகிய

## தெய்வநாயகம்பிள்ளையவர்கள் இயற்றியது

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

பொன்பூத்த திரைப்பொன்னிப் புண்ணியமா
நதிபுணரிப் புனல்க லந்த
கொன்பூத்த வுவரகற்றி யிழிந்தவரைக்
கலந்தபெருங் குற்றம் போக்கு
மின்பூத்த பேரறிவா னமைந்தவான்
ஞேர்நிகர்த்து மேவ லாலே
தென்பூத்த வளமன்னு பொன்னிநா
டென்னுமுயர் சென்னி நாட்டில். 1

தேன்கலந்த மலர்நிறையக் கலந்தும்வரி
யளிக்கூட்டாச் செழும்பூந் தெய்வக்
கான்கலந்த விண்கலந்தவ் வளிக்கினிய
மதுவூட்டிக் கவின்ற செல்வந்
தான்கலந்தும் வறியவர்க்கூட் டார்நகரங்
கலந்தன்னஞ் சலிக்க வூட்டும்
வான்கலந்த வள்ளனிகர் பொழில்கலந்து
சூழ்துறைசை மாத்த லத்தில். 2

துலங்குதிரு வெண்ணீறுங் கண்மணியும்
பூங்காவித் துகிலு மோவா
நலங்குலவு சிவார்ச்சனையு நயந்தபெரு
முனிவர்பலர் நண்ணி யெங்கும்

---

* இது பழைய பதிப்பைச்சார்ந்தது

இலங்குசிவா கமமுதல விசைப்போர்கேட்
போர்சிந்தித் திருப்போர் மற்றை
வலங்குலவத் தெளிவோர்க ளாயென்றும்
வயங்குதிரு மடத்தின் மாதோ. 3

சடைகரந்த திருமுடியும் விழிகரந்த
தனிநுதலுந் தழைபூங் கொன்றைத்
தொடைகரந்த திருத்தோளும் விடங்கரந்த
மணிமிடறுந் துலங்கு சூலப்
படைகரந்த திருக்கரமுங் குழைகரந்த
வார்செவியும் பாய்பு லித்தோல்
உடைகரந்த திருவரையு மறைமணிநூ
புரங்கரந்த வொளிர்பொற் ருளும். 4

உற்றுநனி யழகெறிப்ப விளங்குதிரு
வருளுருவ மொன்று தாங்கிக்
கற்றவர்வெம் மலக்கருளை விழுங்குறுமெய்ஞ்
ஞானபாற் கரனே குற்ற
மற்றகதிர் மாமணியே யாரமுதே
யெய்ப்பினில்வைப் பனையா யென்று
சொற்றிடவீற் றிருந்தருளம் பலவாண
தேசிகன்பூந் துணர்ப்பொற் ருளில். 5

பிறந்துபல நாளிருந்து தரிசித்தோர்ச்
சொலலென்னே பேணி யோர்நாட்
சிறந்தொருகா லடைந்தன்பிற் றரிசித்தோர்
தமக்குமருள் சிறப்ப நல்கி
மறந்தகலா வணம்புரியுந் தாயான
மாதேவன் வைக லாலே
நிறந்தழையும் பெருஞ்சீர்த்தித் திரிசிராப்
பள்ளியில்வாழ் நெடிய சீலன். 6

விண்ணுலகத் தமர்ந்துதனே யடைந்தோர்க்கு
விரைந்தழியும் வெறுக்கை நல்கிக்
கண்ணுறுசிற் றின்புறச்செய் தறக்கழிவு
கண்டிடுகற் பகம்போ லாது
மண்ணுலகத் தமர்ந்தடைந்தோர்க் கழிவில்கல்விப்
பொருள்வழங்கி வனேபே ரின்ப
நண்ணுறச்செய் தறம்பெருக்கு மீனுட்சி
சுந்தரப்பேர் நல்லோ னன்பால். 7

என்னறிவா லின்னவென வறிந்தறிந்து
வகுத்துவகுத் திசைத்தல் கூடாப்
பன்னலமு நனிசிறந்து விளங்கவனேந்
தணிந்தபா மாலே யாய
நன்னலஞ்சே ரொருபிள்ளேத் தமிழினேவார்
திரைசுருட்டு நரலே சூழ்ந்த
மன்னுலகங் கொளுமாறு வயங்குறுமச்
சிற்பதித்து வழங்கி னுனல். 8

அனேயனுய ரிந்நூலா சிரியன்பாற்
கற்றவனென் னருமை நண்பன்
வினேயமலி நூல்களெலா முணர்ந்துணர்த்து
நுண்ணறிவான் மிக்க சீலன்
வனேநிகரு மணிமன்று ணடநவில்குஞ்
சிதகமலந் தணவா துள்வோன்
நனேயலர்தார்ப் புயத்தியாக ராசநா
வலவனெழி னலமிக் கோனே. 9

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

# குறிப்புரை முதலியன

## பாயிரம்

திரிகுணம் - மாயாகுணங்கள்: முக்குணம்; சத்துவம், இராசதம், தாமதம் என்பன. கருமூடிகம் - கரிய நிறத்தை யுடைய பெருச்சாளி. பணி - பாம்பு. வயக்கிடுதலால் - விளக்கும் காரணத்தால். கிழக்கு - கீழ். மேக்கு - மேல். நாப்பண் - நடுவிடம். தாப்பிசைப் பொருள்கோள் - எண் வகைப்பொருள்கோளினுள் ஒன்று, அஃது இடையிலே நிற்கும் மொழி, ஒழிந்த முதலினும் ஈற்றினும் சென்று பொருளைக்கூடும் பொருள்கோளாகும். எனவே, ஊசல் போல் இடைநின்று இருமருங்கும் செல்லும் சொல் என்ப தாம். தாம்பு - ஊசல். இசை - சொல். கயமுகத்தம்பிரான் - யானைமுகத்தையுடைய கடவுள். பரசுவாம் - துதிப்பாம். பொதுப்பெயர் - 'நமசிவாய' என்பது. சிறப்புப்பெயர் - அம்பலவாணன் என்பது; இதில் ஒற்றுநீக்கிக் கொள்க. ஆவடுதுறை: ஐந்தெழுத்தே. அத்தொகைய பாசம் - ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோபவம் என்பன.

சின்மயன் - ஞானமயமாயுள்ளவன். கழி மகிழ் - மிக்க மகிழ்ச்சியையுடைய.

## 1. காப்புப்பருவம்

1. அடங்கலும் - முழுமையும். பொங்கு ஒளி - மிக்க ஒளியையுடைய. ஒளி - புகழ் எனினுமாம். பொற்ப - அழகாக. தெருட்ட - தெளிவிக்க. தெருண்டு - தெளிந்து.

ஞானக்குரவு - ஞானாசாரியத்தன்மை. தாட்புறம் - திருவடியின்மேல். நந்திநாயகன் - திருநந்திதேவர். பரசுவாம் - துதிப்பாம். பேர் உலகர் - பெரிய உலகத்துள்ளோர். கரும அளவில் - கன்மத்துக்கு ஈடாக. கருவிபற்றி - அகக்கருவி புறக்கருவிகளைப் பொருந்தி. ஓர் உழி - ஓரிடத்து. தொழில் ஒன்று - அநுக்கிரகம். நான்கு திருமுகங்களை மறைத்து ஒருமுகத்தையே பொருந்தி. குரவர் தம் கோன் - குரவர்கட்கெல்லாம் தலைவன். அம்பலவாணதேவன் - திருவாவடுதுறை ஆதீனத்துப் பதினைந்தாங்குரவர். இவர்களது காலத்திலேதான் ஆதீனவித்துவானாகவும் மகாவித்துவானாகவும் பிள்ளை அவர்கள் விளங்கினர். ஐந்து முகங்களையுடைய சிவபிரான் ஏனைய நான்கு முகங்களையும் மறைத்து மானிடப்படிவங்கொண்டு ஒருமுகத்தோடு குருவடிவாய் வந்தமை குறித்தபடி. "குருவே சிவமெனக் கூறினன் நந்தி" என்றருளினர் திருமூலதேவர். "ஐம்புல வேடரின்...தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த" என்பது சிவஞானபோதம்.

காக்க என்று பெரும்புகழ் பரசுவாம் என முடிக்க.

2. பொதியத்திருமுனி - அகத்தியர். சயிலாதி -சிலாத முனிவரின் புத்திரராகிய திருநந்திதேவர்: தத்தித பதம். பழங்காப்பியக்குடியோன் - தொல்காப்பியர். உணர்வு - ஈண்டு ஆன்மபோதம். தனித்தார் - ஒப்பற்ற சிவஞானிகள். சரணம்புயங்கள் - திருவடித்தாமரைகள்: தீர்க்கசந்தி. அம் கள். தக்கன் யாகத்தில் சந்திரனைக் காலால் தேய்த்த வரலாறு காண்க. மண் அறையாவாறு - உலகத்தோர் சொல்லாதபடி. திங்களை மறைத்துக் குருவடிவில் இறைவர் வந்தமை குறித்தபடி.

காத்தருள்க என்று சரணம்புயங்கள் தலைக்கணிவாம்.

3. வேதச் சிரப்பொருள் - உபநிடதங்களால் தெளிவிக்கும் பொருளாகிய இறைவன். தியாகமணி - தியாகராசப்பெருமான்: இவர் தியாகசிந்தாமணி எனப்படுவர்.

மன்னன் - முசுகுந்தன். அவித்தை - அஞ்ஞானம். சர்வ சங்கப் பரித்தியாக மணி - சிவஞானபோதம். தவாது - நீங்காமல். மாமலம் - கரிய ஆணவமலம். கழுநீர்: வினைத் தொகை. கழுநீரும் - செங்கழுநீர்ப்பூ மாலையும்: ஆசாரி யனுக்குரியது. நூறி - அழித்து. தனி தெரிக்கும் - சிவத் தைக்காட்டும். மாயை எழினி - மாயையாகிய திரை. வினை நீறு செயும் - கன்மங்களைப் பொடியாக்கும். ஆசாரியர் திருமேனியில் கழுநீர் மாலையும், உருத்திராக்க மாலையும், திருநீறும் அணிந்து விளங்குகின்றமை குறித்தபடி.

காக்க என்று தாள் பரசுவாம்.

4. மணி என்றது தியாகராசப்பெருமானை. ஆன்ற - பெருமைநிறைந்த. நகரங்கள் - "சீரார் திருவாரூர் தென் னுகை நள்ளாறு, காரார் மறைக்காடு காருயில் - பேரான, ஒத்ததிரு வாய்மூர் உவந்ததிருக் கோளிலி, சத்த விடங்கத் தலம்" என்ற வெண்பாவிற்காண்க. ஆரூரிலேதான் வீதி விடங்கர் எழுந்தருளியுள்ளார். சத்தியஞானிதந்த மணி - சிவஞானமணி. பரஞ்சோதிமுனிவர் கயிலாயவாசி; அகச் சந்தான குரவருள் நான்காமவர். பரிபாகம் - பக்குவம். பேதவாதம் அபேதவாதம் என்று பலவாறாகக்கூறி. பிணங் காது - மாறுபடாது.

காத்தருள்க என்று தலைக்கணிவாம்.

5. புறத்துப் படர் இருள் - பூதவிருள். கதிர் - சூரியர். அகத்துப் படர் இருள் - அஞ்ஞானம். புடவி - பூமி. வெண்ணெய் - திருவெண்ணெய்நல்லூர். ஆலவனம் - திருவாலங்காடு: சென்னைக்கு அருகில் உள்ளது. குருந்த வனம் - ஆளுடையார்கோயில்; திருப்பெருந்துறை. அரச வனம் - திருவாவடுதுறை: படரரசு தலவிருட்சம். குரு சிங்கம் - குருராசராகிய ஸ்ரீ பஞ்சாக்கர பரமாசாரியசுவாமி கள். அருள் கூர் - கருணை மிக்க. குருசிங்கமாகிய திரு வம்பலவாணரெனினுமாம்.

காத்தருள்க என்று தாள் இறைஞ்சுவாம்.

6. போதம் - சிவஞானபோதம். பெருங்குரவன் - மெய்கண்டதேவர். சித்தி - சிவஞான சித்தியார். முதலாசிரியன் - திருநந்திதேவர். நாதம் அகன்ற - நாததத்துவம் கடந்த. பெருநிலை - சிவபரம்பொருள். ஆ அடு துறை - பசுத்துவம் நீக்குமிடம்.

7. பங்கயம் - தாமரை. சேற்றிலே முளைப்பன ஆம்பல் முதலிய பல உள ஆயினும் சிறப்பாகத் தாமரையையே குறிப்பதுபோல என்க. கடந்தை - திருப்பெண்ணுகடம் என்பதன் மரூஉ. கரிய மலப்பிணி - கரிய ஆணவமல நோய். கழல் சூட்டி - திருவடிதீட்சை பண்ணி. கல் மனம் - கல்போலும் வலிய மனம்; 'நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்துருக' என்றருளினர் அருணகிரிநாதர். கனகப் பரிய மதில் - பொன்னால் செய்யப்பட்ட பெரிய மதில்கள். கழலாது அமர் அம்பலவாண தேசிகன்.

8. சிவப்பிரகாசம் - சிவவொளி. தவப்பிரகாசம் - தவவொளி: தவம் என்றது, ஈண்டுச் சரியை கிரியா யோகங்களை. சிவப்பிரகாசம் - புடை நூல்; முதனூல் சிவ ஞானபோதம்: வழிநூல் சிவஞானசித்தியார். பல நூல் என்றது; திருவருட்பயன், நெஞ்சுவிடுதூது, போற்றிப் பஃறொடை, உண்மைநெறி விளக்கம், கொடிக்கவி, வினா வெண்பா, சங்கற்ப நிராகரணம் என்பன. உமாபதிசிவம் அருளிய நூல்கள் எட்டும் 'சித்தாந்த அஷ்டகம்' எனக் கூறப்படுவதுமுண்டு. பெரும்புலவர் - திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலிய சமயகுரவர். கரும்புகள் கமுகு என்று சொல்லும்படி உயர்ந்துவிளங்கும் வயல்கள் என்க.

9. இருண்மலம் - ஆணவம். இருவினை - பெரிய கன்மமலம். அருளோடு கூடிய நமச்சிவாயன். நண்ணல் - பொருந்துதல். பொருள்மலி செங்கொன்றை - 'பிரணவப் பொருள் இவனே' என்னும் பொருள் நிறைந்த அடையாளப்பூமாலை. சிவபிரானுக்கு உரித்து. நலவர் துதி - நல்லோராகிய சமயகுரவர் அருளிச்செய்த தேவார திருவாசகங்கள். தெருள் மலியா - தெளிவு நிரம்பாத.

10. தம் அடியர் - ஸ்ரீ நமச்சிவாயதேசிக மூர்த்திகள். தூற்ற - இட்டு அருச்சிக்க. இருதேசிகரும் - கிரியா குருவும், ஞானகுருவும்; வியாழனாகிய தேவகுருவும், வெள்ளியாகிய அசுரகுருவும் எனினுமாம். பொருவ - ஒப்ப.

11. புரவு மிகு - காத்தல்மிக்க: நீதிநூல் ஆகலின் அவ்வாறு கூறினர். குருமூர்த்தம் பத்து - அகச்சந்தான குரவர் நால்வர், புறச்சந்தான குரவர் நால்வர், அருணமச்சிவாயர், சித்தர்சிவப்பிரகாசர் என்பார். உள் பொருள்: மெய்ப்பொருள். இது என்றது பஞ்சாக்கரத்தை· பஞ்சாக்கரமே திருமேனிகொண்டு வெளிவந்த தென்றார். 'பெரும்பெயரே பெயராக வந்த, ஒரு வாய்மை தன்னை நினையினும் உள்ளம் உருகுவதே" என்றருளினர் ஸ்ரீகச்சியப்ப முனிவர். பதினல்வர் - பாட்டுடைத்தலைவருக்கு முன் எழுந்தருளிய பதினன்கு குரவர்கள். குரவு - குருத்தன்மை. அரசு - அரசன்: தலைவன்.

## 2. செங்கீரைப்பருவம்

1. சமழ்ப்பு உற - நாணம்கொள்ள. "சுரமா மகளிர் விழித்தொழிற்குத் தோற்றுச் சமழ்க்கும்" (அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் - தாலப் - 2 செய்). நின் என்றது சிவ பெருமானை: சிவாகமம் என்றபடி. தீட்சை - எதனைச் செய்தாலும், எதனைச் செய்யாமையால் பயன்கிடையாதோ அது தீட்சை: "நயனத்தருள் பரிசம் வாசகம் மானதமும், அலகில் சாத்திரம் யோகம் அவுத்திராதி அநேகமுள..." (சிவஞானசித்தியார்). கண்ணபிரான் உபமன்னிய முனிவரிடம் தீட்சை பெற்றுக்கொண்டனர் என்பது வரலாறு. "கண்ணன் உபமன்னிய முனிபாற் சிவதீக்கையுற்றுத் தன்னையுந் தலைவனையும் உணர்ந்தோனாகலிற் சிவோகம் பாவனையைத் தலைப்பட்டோனாதல் அறிக" "(சிவஞான போதச் சிற்றுரை சூத் 2 - அதிகர - 1). புவிக்கோதை - பூமியாகிய பெண். தான் நின்று அருந்தவம் செய்வள். பருவம் - பக்குவகாலம். செங்கை தலைமேல் வைத்து - சிவோகம்பாவனைசெய்து சீடன் சிரத்தில் ஞானசிரியன்

கரத்தை வைத்து: பாசக்ஷயம் செய்தல் என்பதாம். பதம் சூட்டி - திருவடிவைத்து. சிற்பரன் - ஞானமே வடிவான மேலோன்.

2. நான்முக முனிவன் - பிரமன். முருகு - வாசனை; தேன் எனினுமாம். துயல்வரு - தொங்குகின்ற. முகுந்தன் - திருமால். அந்தை தவிர் - துன்பம் தீங்கிய: அரந்தை என்பதன் மரூஉ. "அந்தையுற வந்துவரை பேர்த்தெடுத்தான்" (மங்களாம்பிகை பிள்ளைத் - செங்கீரை - 4 செய்). ஆகா ஊகூ என்பவர் சிவபிரான்பால் வரம்பெற்றுத் திருச் செவியில் எப்போதும் இசையூட்டுபவர். இரு முனிவர் - பதஞ்சலி, வியாக்கிரபாதர்.

3. மும்மை உலகு - சுவர்க்க மத்திய பாதலங்கள். குறிகுணங்கடந்தவர் பரநாத பரவிந்து கழன்றவர் முழுத்த பேரொளிப்பிழம்பினர் இறைவர் எனக் குறித்தபடி. முற்றறிவுடையவர் இறைவர். ஆன்மாக்கள் அறியாமையுடையார். எய்ப்பில் வைப்பு - சேமநிதி.

4. ஐய: விளி. எண்ணுத - மதியாத: அயன் அரி முதலோர் சகலவர்க்கத்துட்பட்ட ஆன்மாக்களே அன்றிக் கடவுளாகார் எனக் குறித்தபடி. வழிவழி அடிமை - பரம்பரை அடிமை: மீளா அடிமை என்க. ஆவணம் - முறிச்சீட்டு. அடங்கா விருப்பு - அமையாத ஆசை. செய்யதன்று - செப்பமுடையதன்று: தக்கதன்றென்க. மொழிதலும்: இழிவுசிறப்பு.

5. கங்காளம் - முழுவெலும்பு. காகோதரம் - பாம்பு. சிவபிரான் தம்முடைய கோலத்தினின்று நீங்கி அருளாற் குருவடிவங்கொண்டு மானிடப் படிவம் தாங்கிவந்தமை குறித்தது. குஞ்சிதம் - வளைவு. காவி - செங்கழுநீர்ப்பூமாலை: இது குரவற்குரித்து.

6. பிறைபடு பல் - பிறைச்சந்திரன்போன்று வளைந்த பற்கள். குறள் உடல் நெளிய. பிணர் - பின்கழுத்து. வெரிந் - முதுகு.

7. தோலா - கெடாத: தோல்வியில்லாத. சிங்கக் குருளை - சிங்கக்குட்டி. நினை கருதார் உள்சென்று.

8. கந்தரம் - கழுத்து. கருமை - விடக்கறை. பணம் - படம். புள்ளிய - புள்ளிகளையுடைய. வாள் - ஒளி. கோகழி - திருவாவடுதுறை. "கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க" (திருவாசகம்).

9. பிருதிவி - மண். பைங்கூழ் - பயிர். அடவி - காடு. வளி - காற்று. வர சரணத்தின் - மேம்பட்ட திருவடிகளில். அரசவனம் - திருவாவடுதுறை. ஐம்பெரும் பூதங்களையும் அமைத்தமை காண்க.

10. நா வடு ஒன்ற - நாத்தழும்பேற. காளிதம் - களிம்பு: ஈண்டு ஆணவமலத்தைக் குறிக்கும். தயாநிதி - அருட்கடல். எகினம் - அன்னம்.

## 3. தாலப்பருவம்

1. முருந்து - மயிலிறகின் அடிக்குருத்து. முறுவல் - பற்கள். எகினம் - அன்னம். முகில் - மேகம். புணரி - கடல். வரை இவர்ந்து - மலையின்மேல் ஊர்ந்து சென்று. பயம் - நீர். பாசிபோர்த்து எழுந்த அன்னப்புள் கடல் குடித்துக் கறுத்தெழுந்த மேகத்துக்கு உவமிக்கப்பட்டது.

2. மாமை - தேமல். ஆன்றேய்: விளி. குலிசப்படை - வச்சிராயுதம். வேந்தன் - இந்திரன். பிணங்கும் - மாறுபடும். பெயர - மறுபடியும்.

3. மதனன் உயர்த்த மீனம் - மீனக்கொடி: மன்மதனுக்கு உரியது. சுதன்மை - இந்திரசபை. சார்வாகம் - பௌத்தமதம். துயர - வருந்த.

காவிக்கொடி கீழ்ப்படுத்தி, விடுத்த திருமுகம்போல் மேவ, நோக்கி நடுநடுங்கி, வினவில் எவன் அறைவாம் எனக்கூட்டுக.

4. மீப்போய் - மேலே சென்று. தேவகுரு - வியாழ பகவான். அடைந்தவன்: முற்றெச்சம். கொய்வான்: வான் ஈற்று வினையெச்சம். குறித்த - நினைந்த. இதனை என்றது காவிக்கொடியை. இணர்த்து - பூத்து. கவுளின் - கன்னத்தில். அனையான் - வியாழப்புத்தேள். திருவரசு - தலவிருட்சம்: இது படரரசு எனப்படும்.

5. மதவேள் - மன்மதன். காஞ்சி - காஞ்சிமரம். காஞ்சி, கரும்பு, குயில், கிள்ளை, கமல முதலிய மலர்கள், கமுகம்பாளை, மீனம் இவை மன்மதனுக்குரிய கருவிகள். உள் ஆய்ந்து வடிவம்தாங்கிக் கருவியொடும் நிற்கும் நிலையென்ன விளங்கா நின்ற கழனி என்க.

6. "...மாதர்தங், கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும், கல்வியென்னும் பல்கடல் பிழைத்தும், செல்வமென்னும் அல்லலிற் பிழைத்தும்..." என்னும் திருவாசகப் பகுதிகள் சிந்திக்கத்தக்கன. தருக்கம் சத்த நூலாகலின் 'இரைதருகின்ற தருக்கம்' என்றார். அகம்பரம் - நானே பிரமம். இரித்தவரும் - ஓட்டெடுக்கச் செய்தவர்களும். சூழ்ந்து - சுற்றியிருந்து; ஆலோசித்து எனினுமாம்: சூழ்தல் - ஆராய்தல். எண்ணிலர் - கணக்கில்லாதவர்: எண்ணிலராய் - ஆராய்ந்துபாராதவராய் எனினும் பொருந்தும். எண் - கணக்கு, எண்ணம்.

7. முளைமதி - பிறைச்சந்திரன். இருள் சீத்தலின் - இருளைக் கெடுத்தல்போல; இன்: உவமவுருபு. முருக்கு - அழிக்கின்ற. அ மலக்கு - அந்த ஆணவமலத்துக்கு. பல் உயிர்களிடத்தும் தோற்றி வெளிப்படும் என்க. கேவலம் சகலம் சுத்தம் ஆகிய மூன்று நிலைகளினும் பசிய மரத்தின் கண்பொதிந்த தழலும், கல்லிலடங்கிய தழலும், இரும்பில் தங்கிய தழலும்போல முறையே நிலைபெற்று என்றபடி. தளை - கட்டு: அரும்பு.

8. பிள்ளைத்தமிழ் நூலில் பாட்டுடைத்தலைவரைச் சிறு குழந்தையாகப் பாவித்து, அவ்வப் பருவங்களுக்கு ஏற்ற

செயல்களைக் கூறித் துதித்தல் மரபாகலின் அவ்வாறு கூறினர். நீர்மையின் - தன்மையின். ஐயுறல் - சந்தேகப் படாதீர். செங்காட்டில் - திருச்செங் காட்டங்குடியில். முன்னை அடைந்தது போல - முன்பு வைரவக்கோலங் கொண்டு 'தண்டாததொரு வேட்கைப் பசியுடையார் தமைப்போலச் சென்று பிள்ளைக்கறிவேண்டும்' என்றபடி. முன்னியது - கருதியது. முற்றிய - முதிர்ந்த. எங்களையே நல்குதும் - எங்களையே கொடுப்பேம். பெட்பு - விருப்பம். பெற்றி - தன்மை. அடையற்க - செல்லாதீர். தன்னை இழப்பின் - தற்போதத்தை இழந்தால்.

9. வேதமுடி - வேதசிரஸ்: உபநிடதம். புகறலின் - சொல்லுதலால். எண்ணிய - மதிக்கப்படுகின்ற. எங்களை வாங்கி - ஆன்மபோதத்தைப்பெற்று. உனைதந்திடுதலின் - சிவபோதத்தைக் கொடுத்தலின். உயிர் நிலம், உணர்வு புனல், பேரின்பம் போகம். இருது - நீங்காமல். நால் வரும் - அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நால்வருணத்தாரும். வருணாதி ஒழிந்து - சாதி முதலியன ஒழியப்பெற்று. கண்ணிய - கருதுகின்ற. தற்குறிப்பேற்ற வணி. நிலத்து நீர்பாய்ச்சிப் போகம் விளைத்தல் உருவகம்.

10. வன் தொடர் - வலிய சங்கிலி. வைகுறும் - தங்கும். ஆகமம் சங்கிலி, மறை தொட்டில், உபநிடதம் அணை. மீமிசை - மேலாக. மடவர் - இளமைநலமுடை யார், அறிவிலாதார். எண்ணலை - எண்ணுதீர். முகை - மொட்டு. தரு - மரம். முற்றியவோ - வந்து பொருந் தியவோ. அவண் - வைகைக்கரையில்.

வைகுறும் யாம் வைகுவதோ? வைகினை முற்றியவோ? யாது மொழிந்திடுவாய்.

## 4. சப்பாணிப்பருவம்

1. கை பர சுமை - கையின்கண் உள்ள பாரமாகிய சுமை. ஒன்று இனிது இயற்றுதற்கு எண்ணுர். ஒன்று - சிறிதும். வல்லார் - மாட்டார். தமருகம் - உடுக்கை. உடம்

படுதல் - ஒத்துக்கொள்ளுதல். கன்றும் - கன்றிப்போம். செற்று - நெருங்கிய. பயின்ற - பழகிய. பாற்கரன் - சூரியன்.

2. பேர் - கீர்த்தி. சமயதீட்சை விசேடதீட்சைகள். பொற்ப - அழகாக. அத்துவசோதனை: அத்துவசுத்தி ஆறு அத்துவாக்களினும் கட்டுப்பட்டிருக்கும் போகங்கள் எல்லாவற்றையும் ஏககாலத்திலே புசிப்பித்துத் தொலைத்து முத்திகொடுத்தல். மனு - மந்திரம். மனுமுதலாய அத்தவடிவங்கள் ஆறு - மந்திராத்துவா முதலாக எண்ணப்படும் முதல்வன் திருமேனிகள் ஆறு: அவை - மந்திரம், பதம், வன்னம், கலாத்துவா, புவனத்துவா, தத்துவாத்துவா என்பன. மந்திராத்துவாவே சிவபெருமானுக்குச் சிறப்பான திருமேனியாகலின் 'மனுமுதலாய' என்றார். சிரத்தின் மேல் என்றமையின் சாந்தியதீதகலை முதலாகக் கொள்ளப்படும். கண்ணிய - கருதப்பட்ட. திருவடி சிரத்திற் சூட்டுதல். கைமீதேறுதல் - கைலாகு கொடுத்தல்.

3. சின்மயன் - ஞானவடிவினன். பாடிய முனிவன் - ஸ்ரீ மெய்கண்டதேவர் அருளிச்செய்த சிவஞானபோத நூலுக்குப் பேருரை வரைந்தருளிய ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகள்: சிவஞானபாடியம் என வழங்கப்படுவது அது. கச்சியப்ப முனிவர் - சிவஞானயோகிகள் மாணவர் பன்னிருவரிற் சிறந்தவர். துதி நிகழ்த்தல் - கச்சியப்பமுனிவர் செய்தருளிய பஞ்சாக்கர தேசிகரந்தாதியைக் குறித்தது. இற்று - இத்தன்மைத்து. பாட்டே பேணுக - "நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க, அர்ச்சனை பாட்டே யாகும் ஆதலான் மண்மேல் நம்மைச், சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்" என்று அருளியமை. வன்றொண்டர் - ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள். பேசு(க்) எனில் - சொல்வாயெனக் கேட்கின்.

4. திருவாதவூரடிகள் - ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள். கோவை - திருச்சிற்றம்பலக் கோவையார். மூர்த்தி - மூர்த்திநாயனார். இடந்திடுதல் - தோண்டுதல். மெய்க்

குறிப்புத்தொண்டர் - திருக்குறிப்புத்தொண்டர். உத்தம அங்கம் - தலை. பாய - பரவிய. வாங்குதலும் - வளைத்தலும். மாயப்பகழி - மாயனாகிய அம்பு: மாயன் - திருமால். சமயம் - காலம்.

5. எள்ள அரும் - பழித்தலில்லாத. சிவபிரானைக் குழந்தைப் பருவத்தில் வைத்து யாவரும் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம் செய்திலர்: மரபுமன்று. இரும் தவர்கள் - பெரிய தவத்தையுடையோர். நால்வர் - சனகர், சனற்குமாரர், சனாதனர், சனந்தனர். விள்ளரும் - சொலற்கரிய. குந்தம் - குருந்தம் என்பதன் மரூஉமொழி. ஓர்ந்து - ஆராய்ந்தறிந்து. சுத்தம் மேல் சித்தாந்த சைவம் - சுத்தசைவத்தின் மேம்பட்ட சித்தாந்தசைவம். சுத்தசைவமாவது; சித்தாந்த சைவத்தையொப்பப் பதி பசு பாசங்களின் இயல்புகளை உடம்பட்டு முத்தியில் உயிரானது சிவபரம் பொருளினிடத்து ஐக்கியமுற்று ஒருபயனும் ஓர் ஆனந்தமுமின்றி நிற்கும் என்பது. இதற்கு அதீதமானது சித்தாந்தசைவம்.

6. விண்டு அலரும் திறம் இன்றி. தானவன் - அரக்கன். வெய்யவன் - சூரியன். தம் கொழுநன் - தங்கணவன். தண்டல் இலாது - நீங்காமல். தாமரைக்குக் கணவன் சூரியன். எறிதரல் நேர் ஆம் - எறிவதை ஒக்கும். வெள்ளிய - வெண்மை நிறமுடைய. தண்ணிய - குளிர்ந்த. நீறு - விபூதி. அண்டல்செய் - நெருங்கும். அருள்கையால் - அருளுவதனால். எருத்து உரி - இடபத்தின் தோல். கொண்டல் - மேகம்போல. கோகழி - திருவாவடுதுறை.

7. பாலம் - நெற்றி. செங்கண் - சிவந்த அக்கினிக் கண். அநங்கன் - மன்மதன். படரான் - துன்பத்தால்; படர் - துன்பம். ஓவி - நீங்கி. பண்ணவ - கடவுளே: விளி. நவிற்றல் அலால் - சொல்லுவதையல்லாமல். வரைந்து விடுத்திடும் - எழுதிய யனுப்பும்; என்றது 'நமசிவாயம்' எனக் கைச்சாத்திடுதலை. அயர - வருந்த. ஸ்ரீமுகங்களில் திருக்கைச்சாத்திடும் திருக்கரத்தால்.

8. நீடிய அன்பு - மிக்க அன்பு. நிலவு வெண்நகை- குளிர்ந்த புன்னகை; மந்தகாசம். அன்னர் - அத்தொண்டர். படர் - துன்பம். விலங்கல் இலாது - நீங்குதலின்றி. பவம் - பிறப்பு. மலப்பிணி - ஆணவ மலமாகிய நோய். உண்கலசேடம் - பரிகலசேடம்; (சுப்பிரமணியதேசிகர் மாலை: செய்; 95). விடை - இடபம். வான் இடபம் - இடப ராசி. திருவாவடுதுறை ஸ்ரீ மாசிலாமணி ஈசர் கோயில் மதில்களில் உள்ள நந்திகளைத் திருமாளிகைத்தேவர் ஓர் உருவாக்கி நாரசிங்கன் என்னும் கொடியஅரசனெருவனை வெல்லும்படி அனுப்பினர் என்பது வரலாறு. ஆகலின், மதில்களில் நந்தி கிடையாது.

9. வாய்மை - உண்மை, நல்லொழுக்கம். விழுப்பம் - மேம்பாடு. ஒள் அறிவு - விளக்கமான அறிவு: என்றது கூர்த்த அறிவினை. ஓருபு - ஆராய்ந்தறிந்து. தைவரும் - தடவும்.

10. சேர்ந்து அறியா நம் கைமலர் - "சேர்ந்தறியாக் கையானை": குவித்தறியாது என்றபடி. நினை பூசை ஆர்ந்து - நின்னைப் பூசைசெய்து. ஆன்மாக்கள் எவ்வாறு பூசித்துப் பேறுபெறல் வேண்டும் என்பதைத் தாமே பூசித்துக்காட்டுதல்: 'தன்னைத்தான் பூசித்தல்' என்பது. "காட்டுவித்தா லாரொருவர் காணுதாரே காண்பாரார் கண்ணுதலாய் காட்டாக்காலே" என்பது திருநாவுக்கரசர் தேவாரம். அயர்த்தனைகொல் - மறந்தனையோ. அ பரிசு - அத்தன்மை. அறிவு கூர்ந்தவர் - கூர்த்த அறிவுடைய பெரியோர்.

## 5. முத்தப்பருவம்

1. மூலமலம் - ஆணவமலம். அகக்கட்டு. பந்தம் - கட்டு, தளை. தனு - உடம்பு. கரணம் - அந்தக்கரணம். அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என நால்வகைப் பந்தம். ஒன்று - ஒருமந்திரம். முருகு - வாசனை; தேன் எனினுமாம்.

2. மலபரி பாகம், சத்திபதிதல், இருவினையொப்பு. மலக்கட்டு - ஆணவமலபந்தம். சுத்தத்தில்-சுத்தநிலையில். இருவினையொப்பும் மலபரிபாகமும் சத்திநிபாதமும் வந்த காலத்துச் சரியை கிரியா யோக ஞான பாதங்களை யுணர்ந்த குருகடாட்சத்தினுலே மும்மலங்களையும் நீங்கிச் சச்சிதானந்த சிவமாக விளங்கும் அவதரம். கேவலம் மலமனைய நின்ற அவதரம். சகலமாவது எல்லாக்கருவிக ளோடும் கூடிநின்று வினைப்பயனை அநுபவிக்கும் அவ தரம் என மூன்று அவத்தைகளையும் கண்டு கொள்க. தசம் செய்து - பத்துக் காரியங்களையும் செய்து: தசம் - தசகாரியம்: அவை: தத்துவரூபம், தத்துவதரிசனம், தத் துவ சுத்தி; ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி; சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பன. அத்துவிதம் - இரண்டற்ற நிலை. இப்பாடலில் அகச் சம்பந்தம், அகப்புறச்சம்பந்தம், புறச்சம்பந்தம், புறப்புறச் சம்பந்தங்கள் இவை என விரித்தார்.

3. இப்பாடலில் இதயபங்கய நிலை கூறப்பட்டது. " நாட்டுமிதயந்தானும் " (சிவஞானசித்தி: 9 சூத் 9 ஆம் செய்). நம் தாள் நிலை.

4. இதய பங்கயம் - இதயதாமரை. " அஞ்செழுத்தா லான்மாவை" (சித்தி: சூத் - 9: செய் 8) நோக்கி அறிக. கொல்லாமை முதல் எண்பூ - கொல்லாமை, ஐம்பொறி யடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்பன. புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியா வர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை என்னும் எட்டுப்பூக்களைக் கொண்டு புலரிக்காலத்திலே புறந்தே பூசிக்க எனச் சிவாகமம் விதித்தது. " எட்டு நாண்மலர் கொண்டவன் " (தேவாரம்). விந்து அகம் - புருவமத்தி. ஆச்சியம் - நெய். பூசைத்தானம், ஓமத்தானம் தியானத்தானம் கூறியபடி.

5. பரிணமவாதிகள் உயிர் கெட்டுக் கூடி அரனடியில் ஒன்ருய்ப்போம் என்பர்; கெட்டாற் கூடுமாறு இல்லை.

கெடாது நின்று கூடும் எனின், அவ்வாறு நின்று கூடிய வழிக் கேடின்மையின் ஒன்றுதல் பெறப்படாது. அருத்தா பத்தி - பொருட்பேறு. சகசமலம் - ஆணவமலம். ஆற்றல் - வலிமை. பரிவுற்று - இரங்கி; அன்புற்றெனினு மாம். உப்புத் தனது கண்டிப்பினீங்கி நீரினொன்றுமாறு போல ஆணவவலி கெட ஆன்மாச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வு பெறல் என்க. பண்பின் ஒன்றி - அருட் குணங்களாகிய எண்குணங்கள் பதியப்பெற்று.

6. உண்ணீர்மை - உண்மைத்தன்மை. வேதாகமம் - வேதமும் ஆகமமும்: சாமானியருக்கு வேதமும், சத்தி நிபாதத்து உத்தமருக்கு ஆகமமும் என்க. நஞ்சை அமிர்த மாக உண்டும். அஞர் - துன்பம். புலவர் - கடைச்சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மர். வழுதி - பாண்டியன். பொருண்மரபு - இறையனர் களவியல். எண் நீர்மையார்க் கும் - எளியதன்மையுடையார்க்கும்: என்றது தருமிக்குக் 'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் பாடலையும், பாணபத் திரருக்கு 'மதிமலிபுரிசை' என்னும் பாடலையும் அருளி யமை. இது செயின் - முத்தம் தருவதாகிய இதனைச் செய்யின்.

7. துவர் - சிவப்பு. பொதுநாமம் - நமச்சிவாயன். சிறப்புநாமம் - அம்பலவாணன். சூக்குமம் - சூக்கும பஞ் சாக்கரம். இரண்டெழுத்து - 'நம' என்பது. ஓர்ந்து - ஆராய்ந்து. செக்கர்மணி - சிவந்த மாணிக்கக்கல்.

8. ஒளி வார் - சிறப்பு மிக்க. ஒருமாது - தாடகை என்பவள்: தாடகேச்சரம் என்று பெயர் பெற்றது. திருப் பனந்தாள் தலம், கோயில் தாடகேச்சரம் என்பது. முன் நாளில் உள் உருகி. பூசை ஆற்று ஒருமாது. அளி வார் மனத்தில் - கருணைமிக்க திருவுளத்தில். தெரிக்க - தெரி விக்க. கலயனர் - குங்குலியக்கலயநாயனர்.

9. கரி - யானை. வன்றி - பன்றி. மீனம் - திருமாலாகிய மீன். முண்டகம் - தாமரை. புன்னை வாய் - புன்னை மரங் கள் பொருந்திய. இப்பிகளும் சங்குகளும். வளை - சங்கு.

பொருது இகல் அழிந்த - போர்செய்து வலிமை அழிந்த. என்னை ஓதும் திறம். சின்னம் ஏற்ற தார் - அடையாளம் பொருந்திய மாலை: அடையாளம் என்றது வெற்றிக்கு அறிகுறி என்க. கண்மணி - உருத்திராக்கம். முத்துப் பிறக்குமிடங்கள் "தந்திவராகமருப்பிப்பிபூகம்" என்னும் செய்யுளான் அறிக.

10. வாழ்வேங்களுக்கு: வினையாலணையும் பெயர். அல்காத மாமை - நீங்காதபசலை. உகிர் - நகம். கபோலம் - கன்னம். கதிர்ச்செல்வன் - சூரியன். மதியோன் என - சந்திரன் என்று சொல்ல. கடந்துசெல்காறும் - தாண்டிச் செல்லும்வரை. •

## 6. வாரானைப்பருவம்

1. கதிர் மண்டிலம் - சூரியமண்டலம். சேயொளி - செந்நிறம். அடல் அற - வலிமைகெட. அருளில் - கருணை யுடன். மகிழ் தூங்க - மகிழ்ச்சிகொள்ள. புன்மூரல் - புன் சிரிப்பு. பிரதாபம் செந்நிறம், கீர்த்தி வெண்ணிறம் (புகழ்).

2. உஞற்றுநர்க்கு - செய்தவர்கட்கு. நினையல்-நினை யற்க. பொற்ற மதி - அழகிய சந்திரன். புணரிவாய் - கடலகத்து. பணைநிலம் - மருதநிலம். உவர் பற்று புவி - உவர்நிலம். துற்ற - நெருங்கிய. தோலாத - தோல்வி யில்லாத. எதிர் எடுத்தேம். செற்ற - நெருங்கிய.

3. வயம் கொடு கூற்றம் - வெற்றி பொருந்திய கொடிய இயமன். மார்பிடைத் தாக்கும் - மார்பிலுதைக்கும். வேள் - மன்மதன். கணை - அம்பாகிய மலர்கள். அடர்த்தல் - வருத்துதல். சின்னம் - திருச்சின்னம் முதலியன.

4. படிறு - பொய். விடை - இடபம். பட்டாங்கு - உலகம். உள் அடிகள்-உள்ளங்கால்கள். நாவலூர் நம்பி - திருநாவலூரில் அவதரித்தருளிய சுந்தரமூர்த்திசுவாமிகள். நாப்பண் - நடுவில்.

5. கள் - தேன். எங்கள் தலை வைத்திடல். பல் அடி தொக்க - பல அடிகள் பொருந்திய.

6. உடங்கு - ஒருசேர. இவ்விரண்டா - இரண்டு இரண்டாக: வருக வருக என்று. விளிப்போம் - அழைப்போம். மா மேதி - பெரிய எருமைகள். கமுகு - பாக்கு. கற்பகம் மேல் பாய. கரு வானரம் - கருமந்தி.

7. ஒன்று நிறுவி - ஒரு திருவடியை ஊன்றி. ஒன்று எடுத்து - ஒருதிருவடியைத் தூக்கி. பல கண்டு அம்பலத்துள். ஒருவாது - நீங்காமல். உயிர்ப்பான் - நீங்கும் பொருட்டு. நன்று புகல்தும். கதிரோன் - சூரியன். பரிகள் - குதிரைகள். துனைந்து - விரைவாக. துளக்கும் - அசைக்கும். வளியின் - காற்றினால். பரிகள் படர்வான் புடைக்கும்.

8. நாடி - விரும்பி. அல் ஆர் - இருள் நிறைந்த. வல்லார் - மாட்டாதவர். செல் - மேகம்.

9. தாரம் - மனைவி. தனயன் - புத்திரன். கடும்பு - சுற்றம். கந்து - யானைகட்டும் தறி. கறுத்த - கோபித்த. கரடம் - மதச்சுவடு. களிற்று ஈர் உரி. கதிர் கடுக்கும் - சூரியனை ஒக்கும். சிந்தை களிப்பு ஆர் துறைசை.

10. முன்னுரை முன்னான் - தம்மைநினையாரைத் தாம் நினையாதவர். நம ஒழிக்கும் - திரோதமலத்தையும் ஆணவ மலத்தையும் கெடுக்கும். வகரம் - அருள். கலப்பு உணர்த்தும் கையான் - திருவடிசம்பந்தத்தை மோனமுத்திரையால் காட்டியருளும் திருக்கரம் உடையான்: சின்முத்திரைக்கை என்றபடி.

## 7. அம்புலிப்பருவம்

1. கலை அமைதி - கலைகளின் அமைவு, கல்வியின் அமைவு. கார் இருள் - கரிய இருட்டு, கரிய இருண்மலமாகிய ஆணவம். கழுநீர் - செங்கழுநீர்ப்பூ (நீலோற்பலம்) முதலியன, செங்கழுநீர்மாலை. காகோதரத்து உதர

பந்தம் கழிந்து - (இராகுகேதுக்களாகிய) பாம்பின் வயிற்றில் அகப்படுதலை நீங்கி. கதிர் - கிரணம். உரு - வடிவம், நிறம். இலையம் அகல் தண் அளி அமைந்து - ஒருகலையும் ஒடுங்குதல் நீங்கப்பெற்ற குளிர்ந்த கருணை பொருந்தி, குறையாத தண்ணிய கருணை பொருந்தி. எவரும் மாலோன் என - யாவரும் (காம) மயக்கத்தை உடையோன் எனச்சொல்ல. ஆலோன் என - ஆலின் கீழமர்ந்தோன் என. எழில் அம்புயம் கவிழ்தர - அழகிய தாமரை முகங் கவிழ. கவிழ்தர - வெட்கிக்குனிய. கரம் - கிரணம், கை. தலை - சிரம். உயிர்ப்பயிர் அருள்தலான் - உயிர்களுக்குப் பயிரை விளைவித்தலான், உயிராகிய பயிர்களுக்கு அருள் செய்தலான். மலை வரு கதிர் பருதி மண்டிலத்து - உதய கிரியில் தோன்றும் கிரணங்களையுடைய சூரியமண்டிலத்து. மலைவு அரு - மலைதல் இல்லாத. மதியோன் - சந்திரன். அறிவுடையோன். மான் - முயற்கறை, மான். மானுவாய் - ஒப்பாய். அலைவு இல் ஆவடுதுறை.

2. வண்ணம் - அழகு. வளைத்தலால் - சூழ்ந்து வருதலால், (வில்லாக) வளையச்செய்தலால். புலவர் - தேவர், வித்துவான்கள். மருந்து - அமுதம். சத்துவ குணம் - வெண்மைநிறம், அமைதி முதலியன. இவர் உரிமை - ஏறிச் செலுத்தும் உரிமை. எறுழ் - வலிமை. இமில் ஏறு - கொண்டை (திமில்) யையுடைய இடபம். ஏறு - இடபராசி, காளை. புகர் - சுக்கிரன், புகர்நிறம். அரசு - அரசமரம், தலைமையுடைய இந்திரன்.

இவ்விரண்டு பாடல்களும் பாட்டுடைத்தலைவரைச் சந்திரனுடன் சமப்படுத்திக் கூறுவன.

3. முப்பத்துமுக்கோடிதேவர்: அருக்கர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், வசுக்கள் எண்மர், மருத்துவர் இருவர். கூடும்நாள் - கலைகள் வளரும் நாட்களில். இது அல்லாமல். புற இருள் தப - பூத இருள் நீங்குமாறு. முருக்கி - அழித்து. அக இருள் - அஞ்ஞானம். உடல் இலா - உடம்பு இல்லாத. ஒரு பணி - ஒரு பாம்பு: கேது.

உழல்வை - வருந்துவாய். நகு - விளங்குகின்ற. நவை - குற்றம். மதில் நட்ட கொடி வான் அளாவி.

4. துன்ன வரு - நெருங்கி வரும். மடவார் - பெண்கள். அளவு இல். மாதவர் - பெரிய தவசிகள். ஒரு வருணம் - வெண்மை. ஐ வருணம் - ஐந்து நிறங்கள். நன்னர் ஈர் எண் கலை - நல்ல பதினறு கலைகள். அறுபத்துநான்கு கலை: கலை - கலைஞானம்: கல்வி, வித்தை. முயல் - முயற்கறை. முன்னவும் - நினைக்கவும். களங்கன் - களங்கம் உடையவன்: களங்கம் - குற்றம். அகளங்கன் - களங்கமிலான். ஆல் - ஆதலால். முத்தன் - முத்திதரவல்லவன்: 'வீடுபேறு' என்றபடி. மூடரும் மொழிந்திடார் என்க. அருள்நெறி - திருவருட்செங்கோல்.

5. கொளுவி - கொண்டு. சுகவாரி - இன்பக்கடல். சூளாமணி - சிரத்திலே சூடும் மணி விசேடம். நாளும் - எப்பொழுதும். குரவன் இல் - குருபகவானுடைய மனைவி. கழுவாய் - பிராயச்சித்தம். அயல் நிற்க. கருதின் - ஆலோசிக்குமிடத்து.

இவை மூன்றும் பேதப்படுத்திக் கூறுவன.

6. திருந்த - நன்முக. குடந்தம் உற்று - வணங்கி. உளம் நைய. நளினத்திருக்கரம் - தாமரைமலர்போலும் கை. நுதல் - நெற்றி. வெய்ய - கொடிய. விள்ள - சொல்ல.

7. போற்றும் - யாவரானும் வணங்கப்பெறும். போத சிவந்துழி - மிகவும் சிவந்தகாலத்து. "கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள". குரவற்பிழைத்த - ஆசாரியனுக்குத் தீங்கிழைத்த. புகர் - குற்றம். காற்று - போக்கும். கவின மேவுற்ற - அழகாக மேவுதல் பொருந்திய. சுப்பிரமணிய தேவன் - பதினருவது குருமகாசந்நிதானமாக விளங்கிய மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணியதேசிகர்: சின்னப்பட்டத்தில் இருந்த போது. சிவப்பு - கோபம். அனையன் ஆவன் - அத்தன்மையுடையோன் ஆவான்: அத்தன்மையாவது

தாமும் சிவத்தல். அப்பாலும் - அதன்பின்பும். நினக்கு வாழ்வகை உண்டோ.

8. தீட்டும் - எழுதும். கலச் சேடம் - பரிகல சேடம். முகில் - மேகம். நீர் உவர் அகற்றிய. அமரர் - தேவர். கூட்டும் இப்போதும் - திருவருள் கூட்டுகின்ற இக்காலத்தும். கயநோய் ஒழிவதற்கு. முகிலினும் - மேகத்தைவிட: உம்மை இழிவுசிறப்பு, பழங்கதை: திருவெண்காட்டில் எட்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ மாசிலாமணிதேசிகர் எழுந்தருளியிருந்தகாலத்தில் தஞ்சையரசன் காவிரிப்பூம் பட்டினத்தில் கடல்நீராட வந்து ஆடிப் பின்பு பிராமண சந்தர்ப்பணை செய்து அதன் பெருமையைப் பாராட்டி யிருந்தான். மாகேசுரபூசைச் சிறப்பையும் மன்னன் அறிய வேண்டி எச்சில் இலைகளை உவர்நீர்க் கேணிகளில் தனித்தனி போடச்செய்து உவரை மாற்றுவது எது எனச் சோதிக்கச்செய்ய, மாகேசுரரது எச்சில் இலை போகட்ட கிணற்றுநீரே உவர்மாறியது. பிராமணசந்தர்ப்பணையில் எடுத்துப் போகட்ட எச்சில் இலைகள் நிறைந்த கேணி உவர் மாருமலும் புழுக்கள்நெளிந்து நிறைந்தும் இருக்கக் கண்ட அரசன் மாகேசுரபூசையின் சிறப்பினை உணர்ந்து முற்றூட்டுநிலம் விடுத்தான் என்பது. திருவெண்காட்டில் உள்ள ஆதீனமடத்திலுள்ள அக்கிணறு இன்றும் ‘பரிகலக் கிணறு’ என்னும் பெயருடன் வழங்கிவருவது காணலாம். இ கூற்று - இச்சொல். எழுந்து அசைந்து ஐந்தருவையும் ஆட்டும்.

இம்மூன்று பாடல்களும் தானச்சிறப்புக் கூறும்.

9. சாபம் இடுவன் - சபிப்பான். எண்ணுதி - எண்ணற்க. வெங்கண் ஆடு அரவு. வெய்து உயிர்த்து - பெருமூச்சுவிட்டு. கடித்து உடன் விழுங்கியிடும். திங்கள்நாயக. சிறுவிதி - தக்கன். மகம் - யாகம். அயர்த்தாய் - மறந்தாய். செங்கண் மால் - சிவந்த கண்களையுடைய திருமால்: தாமரைக்கண்ணன் ஆகலின். இவன் சாபத்தை நோக்க நின் குரவனிட்ட சாபம் வாழ்த்தாம் என்க.

5 MAY 1975

இது தண்ட உபாயம் கூறியது.

10. வார் - கச்சு. முற்கோலம் - முன்னுள்ள உமா தேவி நிலை. கருதுவார்க்கும் - எண்ணுகின்றோருக்கும். அளவாத - அளவில்லாத. சங்கமம் - அடியார். குரு தரிசனம், சிவலிங்கதரிசனம், அடியார்கள் தரிசனம் கிடைக்கும் வேறுதலம் எங்குமில்லை. மாத்தலம் - பெரிய க்ஷேத்திரம்: மஹாக்ஷேத்திரம் என்றபடி. தேர்ந்திலாய் - அறியாய். செப்பவும் தேர்கிலாய் - சொல்லவும் அறிய கில்லாய். 'தானும் அறியான் சொல்லும் கேளான்' என்பது பழமொழி. "ஏவவும் செய்கலான் தான்தேரான் அவ்வுயிர், போஒ மளவுமோர் நோய்" என்னும் திருக் குறள் அறியத்தக்கது. கடல் என - கடல்போல. பல் முரசம் ஆர்க்கும்.

## 8. சிற்றிற்பருவம்

1. உரு ஆர் மதியம் - அழகிய சந்திரன். எவன் - என்னகாரணம். மரு ஆர் அரத்த மாலை - மணம்பொருந் திய செவ்வரத்த மலர்மாலை: அரத்தம் சிவப்பெனக் கொண்டு செங்கழுநீர் மாலை எனினுமாம். துயல்வரு - தொங்குகின்ற. வெருவார் - அஞ்சாதவராய்: முற்றெச்சம். இது என்றது சிற்றில் சிதைத்தலை.

2. ஒளிசால் - புகழ்மிக்க. இருத்தி - இருப்பாய். முகமன் - உபசாரவார்த்தை. சித்தர் - சித்தர் சிவப்பிர காசர். மணற்சோறு - விளையாட்டில் மணலால் செய்த சோறு. நமக்கு இங்கு ஆகா. நம் விடைக்குத் தா. விடை - திருமாலாகிய இடபம்; மண்ணுண்ட மால் ஆகலின் அவ் வாறு கூறினர். மனத்தில் எதனையோ நினைந்துகொண்டு இவ்வாறு செய்யக் கருதினல். தெளி சால் - தெளிவு சான்ற.

3. ஆரும் - பொருந்தும். பலர் உளர் எனின். வேறு அலைந்து - (நாங்கள் வருந்தி விளையாடக்கட்டிய இந்தச் சிற்றிலையல்லாமல்) வேறான புழுதியில் அலைந்து என்க. சிறியவர்களாகிய நாங்கள் சிறுவீடுகட்டி விளையாடுகிறோம்.

பெருமை தங்கிய தேவரீர் இயற்றுவது பெரிய முத்தி வீடாகும். பேணும் - விரும்பும். நின்னுடைய திருவடியில் மண்படும். உரிஞும் - உராயும். கன்றுவதும் - சிவந்துவிடுவதும். ஒருங்கி - மனம் உடைந்து.

4. பதம் - பக்குவம். வேடன் - கண்ணப்பநாயனார். அடங்க - முழுதும். அமைதர - பொருந்த; பொறுமையாக என்றபடி. சேடம் - மிச்சில். அடி சூட்டும் - திருவடி தீட்சை செய்யும். ஏலாயேல் - ஏற்றுக்கொள்ள மாட்டீராயின். அருளிலான் - அருளில்லாதவன்: அருள் இ(ல்)லான் - அருளுக்கு இருப்பிடமானவன் எனத் தொனித்தலும் காண்க.

5. முன்னைப்பழக்கம் - சிவபெருமானாக இருந்தபோதுள்ள பழக்கம்: சங்கார உருத்திரனாய காலம் என்க. மலம் ஆதிய மூன்று - ஆணவம் கன்மம் மாயை என்பன. காமம் குரோதம் முதல் ஆறு - காமக் குரோத லோப மோக மத மாற்சரியம் என்பன. வீட - கெடும்படி. மதமும் அற - கொள்கையும் நீங்கும்படி. ஆடு இடத்து - விளையாடுகின்ற இடத்திலே.

6. சொல்லொன்று செயலொன்றாக இருத்தலாமோ? அநுக்கிரகம் - அருளல். அழித்தல் தொழில் - (கட்டும் சிறு வீட்டை) அழிக்கும்செயல். வல்லார் - வலியுடையார், மாட்டாதார். வாளா - சும்மா. வில் ஆர் - ஒளி நிறைந்த. கண்ணேறு - கண் திருஷ்டி. செல் - மேகம்.

7. குரவர் பெருமான் - குரவருள்ளே பெருமையுடையான். பொறுத்திருத்தல் விதி ஆகாது. பூவை - நாகணவாய்ப் புள்.

8. கோண் ஆர் பிறை; கோண் - கோணுதல். "கோணிய பிறை சூடியை". தொடை - மாலை. சுவேச்சையின் - தன்னிச்சைப்படி. ஏண் - வலிமை. அருள்வதற்கோ அழிப்பதற்கோ இங்கு அடைந்தது. பூண் -

ஆபரணம். சூளிகை - மாளிகையின் உச்சியறை. மணி - மாணிக்கம். செங்கதிர் - சிவந்த ஒளி. வெம் கதிர்க்கு - வெப்பத்தையுடைய சூரியனுக்கு. மாறு - எதிர்.

9. மாலார் - விஷ்ணுமூர்த்தி. மதவேள் - மன்மதன். கூட்டுண்ணும் - கொள்ளைகொள்ளும். பால் ஆர் - பக்கத்தில் பொருந்திய. பொருள் ஆக - ஒரு பொருளென மதித்து. கோல் ஆர் - வளைவு பொருந்திய. கோலம் - அழகு. வாவி - குளம். தாய் - தாவி. சேல் - சேல் மீன்கள். அடிகள் அழித்தல் செய்வதற்கு உடம்போ, முப்புரமோ, புவனமோ எனக்கூட்டுக.

10. வீங்கும் விருப்பு - பெருவிருப்பு. சுவர் அ சிறு விதி செய் வேள்விக்கள மேகலை. சிறுவிதி - தக்கன். மேகலை - ஓர் உறுப்பு. தயங்கும் - விளங்கும், எம் குழு. மகம் - யாகம். குழு - திருமால் முதலிய தேவர்களும் இருடி கணங்களும். ஆல் அடி குர்வு - கல்லாலடியின்கீழ் தட்சிணாமூர்த்தியாக எழுந்தருளியிருந்தமை. அடு தொழில் - சமையல் வேலை. குரவு என மரப்பெயர் தொனித்தல் காண்க. குரவு - குருமூர்த்தம். சுவர் மேகலை அன்று, மணிகள் தழலன்று, எம் குழு மகத்திற்குழுவன்று.

## 9. சிறுபறைப்பருவம்

1. விரை - வாசனை. தமருகத்தை - உடுக்கையை. மேதினி - உலகம். நோன்மை - வலிமை. குணில் - குறுந்தடி. பிறையைக் குணில் எனக்கொண்டுளாய். வரை - மலை. பாசு ஒளிய - பசிய ஒளியினையுடைய. குலை - கரை. வளை கோட்டு எருமை. கோடு - கொம்பு. வெரீஇ - பயந்து. பொன்னி - காவிரி. சென்னி - சோழன். கோமுத்தி - ஆவடுதுறை.

2. இந்திரிய மா வேட்டம். வேட்டம் - வேட்டை. இமில் - திமில். ஏறு - காளை. முறிவு இல் - நீங்குதலில்லாத. முதுஉணர்வு. அறிவு இல் எமர். கோள் - கொள்கை.

வரை - மலை. இழிந்து - இறங்கி. எஞ்ஞான்றும் - எப்பொழுதும்.

3. பாணினி - ஒருமுனிவர். வியாகரணம் - வடமொழியிலக்கணம். இஃது இற்று. வாங்கு திரை - வளைந்த அலைகள். நால் வாய் - தொங்குகின்ற வாய். கடுத்து - விரைந்து. வரை - மலை.

4. இருளின் விழி - இருளிற்கிடந்த கண். கேவலம்- தனி; ஈண்டுக் கருவி கரணங்களோடு கூடாமை; மலம் அளைய நின்ற அவதரம்: தேகாதிகள் ஒன்றுமற்று, குண மற்று, தொழிலற்று, போகமற்று, கர்த்தாவாகையற்று, மைக்குள் மணிபோல ஆணவமலத்தினலே மூடப்பட்டு, ஓர் அறிவுமற்று வியாபியாய் இருக்கும் அவதரம். வினை வயின் - வினைக்கீடாக. எய்த்தும் - இளைத்தும். எய்யாது- இளையாமல். அறம் உஞற்ற - புண்ணியம் செய்ய. இரு தளை - நல்வினை தீவினைகளாகிய விலங்கு. தத்துவரூபம் தத்துவதரிசனம் தத்துவசுத்திகள் பொருந்திய. மருள் - மயக்கம். மற்று ஐந்தில் எழுதல் - ஆன்மரூபம் ஆன்ம தரிசனம் ஆன்மசுத்தி சிவரூபம் சிவதரிசனம் முதலிய வற்றினின்று செய்யும் முயற்சி. மன்னும் - நிலைபெற்ற. அவ்வருளில் ஒன்ருமல். தசகாரியத்துள் முன்னைய ஒன்பதும் ஆன்மாவின் செயல். ஒன்ற வம்மின் - சிவத்தோடு பொருந்த வாருங்கள்: என்றது, சிவபோகத்தை நுகர என்க. கேவலம் இருள், உடல் விளக்கம். நுமைக்கண்டு என்றது ஆன்மதரிசனம்.

5. சித்தாந்த சைவமாகிய அசுணம், சுத்தசைவமாகிய பயிர், கிரியாகுருவாகிய அரவம், பரசமயமாகிய பருத்திப் பொதி இவைகட்கு முறையே யாழிசை, மழை முழக்கம், மயில் முழக்கம், வெவ்வழல் போல என்ருர். உருவக அணி. குறடு - கட்டை. துணி - துண்டு. கோடு - கொம்பு. வாருபு எறிந்து - வாரிவீசி. திதிசெயும் - காக்கும்.

6. புத்தமுது - புதிய அமுதம். புகர் அற - குற்றம் நீங்க. சிறுபொழுது ஆறு என்ருர் இந்நூலாசிரியர்;

"பொழுதறு காலத்தென்றும் பூசனை விடாது செய்து" என்றார் பிறரும்: சிறுபொழுது ஆராய்ச்சி நோக்கி அறிக. அடிப்பணி - திருவடித்தொண்டு. அடியார்களைச் செந்தாமரை மலராகவும், ஆசிரியனை இளங்கதிராகவும் உருவகம் செய்தார்.

7. ஆசை பேய், புண்ணியம் மகவு, இடும்பை சேறு, பரசமயம் களிறு, வினை காடு, பவம் கட்செவி: பண்புத் தொகைகள், உருவகம். ஆசிரியனை முறையே மந்திர வாதி, அன்னை, பருதி, சிங்கம், வன்னி, புள்வேந்தன் என உருவகம் செய்தமையும் அறிக. உருவக அணி. மகவு - குழந்தை. இடும்பை - துன்பம். புலர்த்த - உலரச்செய்ய. வன்னி - அக்கினி. பவம் - பிறப்பு. கட்செவி - பாம்பு. புள்வேந்தன் - கருடன். முருகு அலர் - வாசனை வீசுகின்ற மலர்கள்: முருகு - தேன் எனினுமாம்.

8. குருவே சிவம் என்றபடி. அடியாரை வழிபடுதலே சிவனடி அடைதற்குரிய வழி. பஞ்சாக்கரமே மந்திரம். அவா - ஆசை. அடல் - கொல்லுதல். தோலா - தோல்வி யடையாத. பின்னிய - வேறு பிரிக்கவொண்ணுமல் கலந்த. பணி - தொண்டு. பேணி - விரும்பி.

9. மாரி எழும்குமிழி - மழை நீரில் தோன்றும் குமிழி. பெட்பினர் - விருப்பமுடையவர். சினமாகிய கனல். பொங்கப்பெறு - மிகப்பெற்ற. ஆளுதலால் புகழ் ஆம். வெய்யேமையும் - கொடுமையையுடைய எம்மையும்: வினையாலணையும்பெயர்.

10. வாரி உடுத்த - கடல் சூழ்ந்த. தேருது - தெளியாமல். ஆரியர்கோ - ஆசாரியர்களுள் தலைவன். கவுள் புடை ஒப்ப - கன்னத்தில் புடைத்தலையொப்ப. மூரிமதில் - வலிய மதில். கவுட்புடையொப்பச் சிறுபறை முழக்குக.

## 10. சிறுதேர்ப்பருவம்

1. வெம்படை - கொடிய ஆயுதம். பரு வலி - மிக்க வலி. தகுவர் - அரக்கர். திரிபுரப்பாழி - திரிபுரத்தின்வலி.

'முப்புரமாவது மும்மலகாரியம்' என்றமை காண்க. வாளி - வாளியையுடைய: அம்பு. சுவற்று - சுவறச்செய்த. மருந்து- அமுதம். திரிபுரமெரித்த வரலாறு இதில் கூறப்பட்டது.

2. தொறுவிமார் - இடைச்சியர். அகப்பட்டு இளங் கன்று அணைதல் மேய. அணைதல் - கட்டுதல். வையம் இது என் என - உலகம் இச்செயலிருந்தபடி யாது என. ஆர்கலி - கடல். வெரிந் - முதுகு. அவண் இன்று இன்னும் நீங்காது. ஓர் எருது - ஒப்பற்ற திருமாலாகிய இடபம். அது - அவ்விடபம்: உண்ட - திருவயிற்றிலடக்கிய. தேர் ஏறி: பெயர்.

3. எழிலோடு இவர்ந்து இனி நடத்தோம். ஓர் ஐயம் இல்லை. திருகு - மாறுபாடு, அறிவு உருவின். திரு மாளிகைத்தேவர் செய்த அற்புதச் செயல்களில் வடமில் லாமல் தேர்நடத்தியதும் ஒன்று.

4. குஞ்சரம், உவா - யானை. துணைவந்த விநாயகர், அழகிய விநாயகர். அச்சு இறுத்திட்ட களிறு. பனி மலர் இறைத்து - குளிர்ந்த பூக்களையிட்டு அருச்சித்து. எண் - எள். சுவைய - சுவைகளையுடைய.

5. வையம் - உலகம்: தேர் எனினுமாம். சுப்பிரமணிய தேவன் - மேலகரம் மகாசந்நிதானம்: சின்னப்பட்டத்தில் உள்ள காலம். நின் பால் - உன் திருமுன். அனைய பக்கம் - அனைய அன்பு: அன்னையைப்போன்ற அன்பு.

6. முதை - பழங்கொல்லை. அலப்படை - கலப்பை. கரவர் - வஞ்சகர், திருடர். முதை மனம், காமமுதலிய மரம், அருள் தழல், அஞ்சு அக்கரம் அலப்படை, அன்பு வித்து, ஆர்வம் நீர், பொறை வேலி, அன்னியசமயம் மா, தவம் பைம்பயிர், சிவபோகம் நுகர்பயன், விடயம் கரவர் என்க. முற்றுருவக அணி. மனு எனும் அது ஐயா.

7. அந்தை - அரந்தை என்பதன் மரூஉ: முன்னும் வந்தது காண்க. அமைந்து - அடங்கி, பொறுத்து என்க.

P. S. Arumbanar ...



யாம் முந்துபு நடத்தல் - மல எழுத்து முற்பட்டு நடத்தல். மலம் முற்பட்டு நடந்த காரணத்தால் பிறவிப்பெருங்கடல் அழுந்தினேம். அக முதன்மை - நான் என்னும் முதன்மை. நேயம் - அன்பு: ஞேயம் எனினுமாம். கருணை பூத்து யாவரும் மனம் மகிழ்ச்சி உற.

8. பொன் நிறம்: பிருதிவி. ஆழி - தேருருளை. கை கால் அடர்ப்புண்டது - தக்கன் வேள்வியில் கையாலும் காலாலும் தேய்ப்புண்டது: சூரிய சந்திரர். தேர்வண்மை - தேரின்வளப்பம். கடினம் - பிருதிவி கடினமாய்த் தரித்தல். பணிகொண்ட - பாம்பினுல்சுமக்கப்பட்ட.

9. உலவா - கெடாத. வெள்ளம் அலை எறிதலால். அம்குமரர் - சனற்குமாரர். கருணைபெறும் அருள் நமச் சிவாயர். திருநந்திதேவர் முதல் பாட்டுடைத்தலைவர் ஈருக வுள்ள ஞானசாரியர்கள் இருபத்தைவர் ஆவர்.

10. வாழ்த்து. ஆ - பசு. ஆகமத்திரள் - இருபத் தெட்டு ஆகமங்கள்: உபாகமங்களையும் கொள்க. இறை - அரசன். பைங்கூழ் - பயிர். ஊர்தி - வாகனம். தருமச்சே - தருமமாகிய இடபம். சைலாதி சந்தானம் - திருக்கயிலாய பரம்பரை நந்திமரபு: சந்தானம் - இடையருமல் வருவது.

குறிப்புரை முற்றிற்று.